
மனமே ஜகத்! மிஹாத்!
இதழ் ③
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# மணமே ஜகந்! மணந்!

## ஒரும் 3

**வெளியீடு :**
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655

முதற்பதிப்பு : அகண்டஜோதி யாத்திரை வெளியீடு
செப்டம்பர் 27, 2011

பிரதிகள் : 350

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஹிமாலய ஸ்ரீமஹாத்மாவின் கேள்விகள் | 16௪ |
| ௨. | கர்ம காரியங்கள் | 167 |
| 3. | ஓர் உண்மை | 175 |
| ௪. | இறை உணர்வு ஏன் சரிவர நிலைக்க மாட்டேன் என்கிறது? | 19௪ |
| 5. | திருக்குறுங்குடி ஸ்ரீமஹாத்மாவின் கேள்விகள் | 195 |
| 6. | ஓர் ஸ்ரீமஹாத்மாவின் கேள்விகள் | ௨18 |
| 7. | எம் ஸ்ரீகுருநாதரின் அமுதவாக்கு | ௨௪0 |
| 8. | ஜீவ நிலை, ஈச நிலை, பர நிலை, அத்வைத நிலை | ௨௪3 |
| 9. | ஒழு(டு)க்கம் | ௨௪7 |


எல்லாம் நீ!

164




ஸித்தே! மனம்! புத்தி! சித்தமென நிகழ்ந்து செயல்படும் எனஅறிக.

(1) மனம்! புத்தி! சித்தம்! இம்மூன்றும் ஒன்றேஎன உணர்க. ஸித்தே இம்மூன்றுமாகிறது.

C) சித்தம்:- அப்படி இரண்டிலும் பிரிவின் (மனம் புத்தியாலும்) வேற்றுமை! அடைந்தவைகள்: இது இன்னது! இன்னது செய்யும்! இது இன்னார்! இவர் இதை செய்வார்! என்ற குணதோஷ பேதங்கள்! வகைய உண்மையெண்ணி; அதை உறுதி நிச்சயம் பண்ணி! அவைகள், இயக்கத்தின் ஆதாரமாகியது சித்தம் ஆகும் என உணர்க.

D) அஹங்காரம்:- (மனிதனுக்கு) இன்னொருக்கு நான் எனதின் (அஹங்கார & மமஹாரமாகவும்) விருப்பு & வெறுப்பின் மூலமாகவும்.




இன்னல்களுக்குரிய விரோத நிலையில்,
இணைச் சேர்க்கை, இணை வேற்றுமை (பகைமை)
இவைகளின் வேகத்தை உண்மையின்
கர்ம காரிய சூத்திரதாரியை
உண்மையை நாடுகிறதை உணர்க.

(4) கேள்வி :— ஸித்தே/சித்தமானநிலை என்ன?

பதில் :— ஸத்தாக (பரமாக) இருந்த ஒன்றே! மாயாவினால் ஸித்தானது. (பிரயோஜனமில்லாத மண்ணை இருந்த ஒன்றே. ஜலத்தின் சேர்க்கையில் பிரயோஜனம் உள்ள களிமண் என ஆனது.) அந்த ஸித்தே! மாயாவின் சேர்க்கையினால் விளையாடவேண்டும் என்ற ஓர் எண்ணம் கொண்டது.



சித்தே அகண்டப்பேரொளி என்ற ஓர் தோற்றம் மட்டும் உடையது என உபசாரமாக சொல்லலாம். உண்மையல்ல. அதற்கு அன்னியமா எதுவும்! எவரும்! இல்லை. ஆகவே அதை சொல்வாருமில்லை அதற்கு காரணருமில்லை.

166

குறிப்பு:- சித்திற்கு எந்த எண்ணமும் இல்லை. அது அகண்ட ஜோதி! என்ற ஓர் தோற்றமுடையது என மட்டும் சத்தியமாய் உணர்க.

ஆகவே ஸித்தே மாயாவான சித்தம் என ஆனது.

(மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரமென நான்கானது) சித்தமாகியதே (மற்றும் மூன்று நிலைகளிலும்; தன்னைப் பிரித்துக்கொண்டு; நாம ரூப! ஜக ஜீவ! அனைத்து தோற்றங்களையும் உண்டுபண்ணி; நான்! எனதென்னும் இச்சேர்க்கைக்கிணை வேற்றுமையின் வேகத்தாலும் விளையாடிக் கொண்டிருக்கிறது! என மெய்யுணர்வால் உணர்ந்தால் போதும். இதை

எல்லாம் பொம்மைகளே! எல்லாம் பொம்மலாட்டமே! எல்லாம் மண்மயமே! மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! பரமாகிய பரமே! அதுவேயாம்! யாமே அது!

என சுகமாக சும்மாவே இருப்பீர்களாக. அந்த ஸ்ரீமஹாவதாரமாவும் ஸாக்ஷி ஆசீர் குரு பாபா.



உ


# கர்ம காரியங்கள்!

கர்ம காரியங்கள் எப்படி விளைகின்றன? என்பதை சற்று விளக்க ஐயன் ஆணை. அவனே விளக்குகிறேன். அவன் கைப்பேனா! வரைகிறது:- சர்வார்ப்பணம் ஸ்திரமாக இருந்தால், இவ்விளக்கம் தேவையில்லை. ஆரம்ப பயிற்சியாளனுக்கு இது தேவை.

தானம் தேவை:- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்! என்றும், வினை விதைத்தவன் வினையை அறுப்பான்.

சொல்லாலும்! செயலாலும் தீமை செய்தவன்! தீமையையே அனுபவிப்பான் இது சத்தியம்.


தினை விதைத்தவன் தினையை அறுப்பான்.



168

சொல்லாலும்! செயலாலும்! நன்மை செய்தவன்
நன்மையையே அனுபவிப்பான் இது ஸத்தியம்
ஆனால் இங்கு கொடுத்ததை வாங்குகிறோம்.
,, ,, வாங்கியதை கொடுக்கிறோம்.
என்பது ஸத்தியமாக இருந்தாலும்; அனுபவம்
வெறும் போது! மா பா வி ம ன ம்!
சலிப்பு, சஞ்சலம், சங்கடம் அடையத்தான் செய்யும்.
தர்மத்தை சொல்லும் போது, இதையும் சொல்ல
வேண்டிய தர்மம் உள்ளது என அறிக.
ஸ்ரீ காந்தி மஹாத்மா சொல்லும் போதனையில்:-

தீயதை (தீயதாக) காணாதே.
,, ,, கேளாதே.
,, ,, பேசாதே. இந்த உண்மையை
உன்னிப்பாய் கவனித்தால் உண்மை விளங்கும்.



169

நீ எதை பெறவேண்டும் என்றும் காணவேண்டும் என்றும், அநுபவிக்க வேண்டும் என்றும், அடையவேண்டும் என்றும், விரும்புகிறாயோ? அதை முதலில் உலக ஜீவர்களுக்குச் செய்வாயாகு.

உலகை நீ கண்டு கொள்ளாதே!
அவ்வுலகம் உன்னைக் கண்டு கொள்ளாது!!
மறு விதமாய்!
அவன் உன்னை கண்டு கொள்வான்!!!

என்ற, தெளிநிலை! அடைந்தவர்களுக்கு இது தேவையில்லை.

காரியப் பற்றின் தாபம் உள்ளவர்களுக்கு மட்டும் சொன்னேன். இன்னமும் சிலர் இருக்கிறார்கள் என சுட்டிக் காட்டினேன்.

இவ்வேழையை மன்னிக்கவும்.



170

அவனை எண்ணி கர்மா செய்.
கர்மாவில் சந்தேகம் கொள்ளாதே.
நடை பெறுவதையும்
அதன் பலன் மேலும் களங்க சந்தேகம்
வேண்டாம். ஆணைநம் உண்மை.

இது ஓர் குறள்.

அவனை எண்ணித் துணிக கருமம் - துணிந்தபின்
எண்ணுவதென்பது (எண்ணியார்ப்பது) இழுக்கு.

அவன் பெயரைச் சொல்லி கர்மம் செய். (குற்றமாகாது)
பலன்கள் முழுமையும் அவனுக்கு அர்ப்பணம் செய்.
(தீயது கெட்டது பாராதே)

எவன் எதைச் செய்தாலும் அவன் அறிவான்.
(அங்கு ஆகாமியம் இருந்தால்)
உன் எண்ணத்தின் நிலை கண்டு பலன் தருவான்.

சர்வார்ப்பணமாக இருந்தால் சொல்லும் செயலும்
மு டி வு று ம்

ஆகாமியமாக நான் & எனதாக இருந்தால் சொல்லும் செயலும்
தொ ட ர் வு று ம். அவன்!
உன்! இதய வாசி & மனச் சாட்சி!




171

கர்ம காரியத்தைப் பற்றி சில உதாரணங்கள்

(1) ஓர் சமயம் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு, நம் பாஞ்சாலி தம்புடவை தலைப்பிலிருந்து, தேமக்கு வெயில் உன்ன வஸ்திரமில்லே ஒரு முழத்துணியை கிழித்துக் கொடுத்தாள். அவனுக்கு அவள் செய்த புண்ணியம் தக்க சமயத்தில் நூற்றுக்கணக்கான புடவைகளைத் தந்து உதவின.

(2) ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஓர் சமயம் திரௌபதி அரை அளவு அரிசி சாதம் / மணம் உவந்து கொடுத்தாள். அது தக்க சமயத்தில் அந்த ஸ்ரீ துர்வாஸ மகரிஷியுடன் / நூறு ஸாதுக்களின் பசியை அமர்த்தி விட்டது.

(3) கர்ணன் செய்த தானங்களானது அவனுக்கு தக்க சமயத்தில் பிராணனைக் காத்தது.





4\. அதேபோல, நம் துரியோதனனும்! நிறைந்த அவையில்! மாற்றான் மனைவியை! (பாஞ்சாலியை) நம் தொடைமீது அமரச்செய் என தம்தம்பிக்கு கட்டளையிட்டான் அநீதிய சொல்லும் & துயரதுரிதீய செயலும்! தருமம் பார்த்து, தொடை முறிக்கப்பட்டது. கை பறிக்கப்பட்டது.


5\. (ஸ்ரீ வேதவியாசபிரானும் நமக்காக ஓர் நாடகம் ஆடினார்) திருமூர்த்திகளில் ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வம்! என பக்தியப் பிரமாணம் பண்ண மற்ற மூர்த்திகளை மதிக்க மறந்த தன்மையால், வாக்குப்பூதான (தோஷமான) தன்மையாலே. தாமே ஸ்ரீ ஜெயதேவ ஸ்வாமிகளாக அவதாரம்

173



கண்ணா! நம் இரு கைகளையும்! இருகால்களையும் இழந்த பாவனையைக்காட்டி; அஸத்தியம் பேசாதே! என்றும் அஸத்தியம் பேசினால், எம்போன்று அவஸ்தையைப் படுவாய் என வாழ்ந்து நடித்து காட்டினர்.

6) இந்த வைபவமே! ஓர் சமயம் பால்ய பருவத்தில் பாத்திர யாத்திரை வகைக்காக, ஓர் பிராமண தம்பதிகள் வயோதிகர்கள் பணத்திற்கு இயலாதவர்கள் உடைமையை உணர்வுடன் பூட்டு கொட்டு; சொன்னதும் சுலோ வாசகம்:- உன்வீட்டில் அடகு வைக்க பாத்திரம் என்ன உள்ளது? அப்படி வைக்க வேண்டுமானால் உன் மனைவியைத்தான் ஆச்சியைத்தான்! அடகு வைக்க வேண்டும் என,



குரும்! அரும்! சொல்வாவி! தாக்கியது!
அம்வைத்தியம். மனிதஇளமையை உணர்ந்து
எம்பிரபு விடம்! கதறிக் கதறி! அழுது அழுது!
மண்ணையும் கேட்டது. அது கேட்டபடியே.


அதன் இருகால்களையும் புடை நோய் வந்தது.

அந்தவைத்தியத்தின் ஏ ரி வா க் கி ன் த ண்
டனை! நிறைவு பெற்றபின் அம்மை மறைந்தது.

இவைகளை வைத்து உணருமிடத்து நம் சொல்லும்

செயலும்! வரமும்! சாபமுமாக! நடைபெற்று
நிறைவு பெறுகிறதென்று உணர்க.

வரமோ! சாபமோ! நம் சொல்லும்! செயலுமாக!
இருப்பதால், இவ்விரண்டையும் சர்வ ஜாக்கிரதையாக
இருக்க வேண்டும்.
இங்கு சர்வார்ப்பணம் மடமுமே!
ஸ்திரமாக இருந்தால் போதும் அவ்விரண்டையும் நம்
பரிபகவான் (மாயர்) கவனித்துக் கொள்ளும்.



3


## ஓர் உண்மை.

லௌகீகம் :- லௌகீகத்தில் உள்ளவன் பிணம் வசப்பட்டவனென்றே. அவனுடைய சொல்லும் செயலும் அவனை யொத்து இருக்கப்பட்டவனுக்கே; அறிய முடியும் (சுநிறு) இசைந்து நடக்கவும் முடியும்.

தெய்வீகம் :- அதேபோல் தெய்வீகத்தில் உள்ளவன் அறவை உடையவன் ஆவன். அவனுடைய சொல்லும் செயலும் அவனை ஒத்து, இருக்கப்பட்டவனுக்கே அறிய முடியும். இவனுக்கு தன்னை ஒத்த இருக்கப்பட்டவனிடம் எந்த சிரமமும் இல்லாமல் கிரஹிக்க முடியும்.

குறிப்பு :- நாம ரூப குண தோஷ சம்பந்தங் கலக்கமுடன்! இருக்கப்பட்டது மனமாகும்.

176



பரமக்கவான் சம்பந்தமும் ஏ க கு ண ஸத்வகுண

சம்பந்தமும்! தௌண்டு, தெ ளி வு ட னு ம்!

உ று தி யு ட னு ம் இருக்கப்பட்ட அ றி வு ஆ கு ம்.

லௌகீகத்தில் இருக்கப்பட்டவனுக்கு தெய்வீகத் தில்

இருப்பவனோடு உறவாடுதலும்/ உறையாடுதலும்

அதி அதி அதிசிரமமாக இருக்கும். ஆனால்?


தெய்வீகத்தில் இருக்கப்பட்டவனுக்கு லௌகீகத்தில்

இருப்பவனோடு உறவாடலும்! உரையாடலும்!


முதலில் சற்று குழப்பமாகவே இருக்கும். ஆனால்

இறுதி நேரத்தில் புரிந்துகொள்வான். காரணம்:-

இவன் முதலில் லௌகீகியாகவே இருந்து வந்தவனாம்.




ஆனால் பரமார்த்திகமாக பேரறிவு சொரூபமாக
உள்ளவனிடம் / இவ்விருவரும் உறவாடலும் /
உரையாடலும்! செய்வது முடியாத காரியமாகும்.
காரணம் பேரறிவானவனுக்கு / மனமும் / அறிவும் /
இவ்வாறதன்மையினால் கூடியாதென்பது சத்தியமே.
ஆணையும் அவன் மௌனஅடக்கத்தில் சமாளித்து விடுவான்.
சலிப்படையமாட்டான். இப்பேரறிவாளனிடம் /
மனம் வரவே வராது இது சத்தியம்.
மனம் நசித்தால் தான் இப்பேரறிவை பெறமுடியும்.
மனம் இருந்தால் அறிவாளியும் ஆக முடியாது நான்.
ஆனால் மனம் நிலைகண்டு வந்து போகும் அறிவாளியாகும்.



178

ஏன் என்றால், மனமும்! அறிவும்! குண சம்பந்தமே! மனம் அனேக குணம்.

அறிவு ஏக குணமானம். இவை ஏறி இறங்குவது சகஜமே! ஆனால்?

அறிவே! பேரறிவாக மாறிவிட்டால்; அது குணாதீத நிலையால்! நிர்க்குணம் ஆகிவிடுகிறது.

ஆ...... கோ......வே?

மனம் உள்ளவனை, அறிவுள்ளவன் சற்று சமாளிக்க முடியும்.


அறிவுள்ளவனை மனம் உள்ளவன் சமாளிக்க முடியாது.

இவ்விருவரும் பேரறிவாளனை சமாளிக்க முடியாதுதான் ஆனால் பேரறிவாளன் சற்று வளைந்து கொடுத்து விடுவான்.

அவ்விருவரும் இவனிடம் இல்லை.

ஆனால்?

இவன் இல்லாமல் அவ்விருவரும் இல்லை. இது சத்தியம்.



தர்மத்தின் வடிவம்
அமைதியின் எண்ணம். 179
சாந்தியின் பார்வை
என இரண்டாகும் எனதுரைக்க.
இவ்விரண்டிலும் அதர்மமாக

தர்மம் அதர்மத்தை அழிக்காது.


ஆனால் அதர்மத்தை (தானே) ஒன்றுடன் ஒன்றை மோதச் செய்து, அதர்மத்தை (தர்மம்) அழிக்கும். என்பது ஸத்திய வாக்காகும்.

தர்மம் பார்க்கும் கனிந்த பார்வையினாலேயே, அதர்மம்! ஒன்றுடன் ஒன்று மோதித் தானே அழியும்.

தர்மத்தின் செயல் ஆக்கத்தின் செயலாகும்.
அதர்மத்தின் " அழிவின் " .

குறிப்பு:- தர்மத்தின் கனிந்த பார்வை!

கேள்வி:- அதர்மத்தை எப்படி அழிக்க முடியும்?
கனிந்த பார்வை என்றாலே, சாந்தியின் பார்வையல்லவா?
அக்கனிந்த பார்வையின் தன்மை என்ன பாபா?



புலி:- தர்மம் சொல்வதாவது:-
கொடுத்தேன், இது அழிவுப் பாதையாயிற்றே.
(அழிவுச் சொல்லாயிற்றே, அழிவுச் செயலாயிற்றே)
என கேட்கும். (மனதிடம்)(அதர்மத்திடம் கேட்கும்?)
அதர்மம், அதை செவிமடுக்காது, பேசும்
செய்யும். (வெறியின் காரணமாக)(வெற்றி என்று)
அங்கு தர்மத்தின், சத்திய வாக்கு
பலிதமாகும். அதனால் அதர்மம் அழியும்.
அதர்மம் செவி மடுக்காது போவதற்குக்
காரணம்:- நாம ரூப, சுவை இனிமை, யும்
ஜக வாஸ தோஷ, பழக்க வழக்கமுமாகும்.

தர்மம், (அறிவு அல்லது
மனச்சாட்சி, அல்லது அந்தர்யாமி, அல்லது
தெய்வாம்சம்) சொல்வதை ஒருமுறை இந்த

# ஓர் உண்மை



சொல்லும் வாக்கையும்!
செய்யும் செயலையும்!
இவ்வாறு மனதையும்
கொடுத்தே! இது
தவறு என தர்மம் (18)
சாட்சி நரியால் சுட்டிக்காட்டும்
வேகம் இருந்தால் மனம் கேட்காது.

கன்னமனம் (அதர்மம்) கேட்டு கருத்துடன்
ஏற்றுக் கொண்டால்; அதர்ம வழி செல்வாமல்.
தர்மத்தின் பாதையில் நின்று விடும்.
அங்கு அதர்மத்தின் வாசல் சர்வநாசமாகும்.
இங்கு சர்வாரிப்பனை ஸ்திரமாக இருக்கால்.
அதர்ம வழி செல்வாவண்ணை மா யா த ம்
ஸ்ரீ நி ஷ க ந் மாற்றி அமைத்துவிடும்.
அதர்மம் (மனம்) அங்கு என்னதான் முயற்சி
பண்ணினாலும், தர்மத்தின் (அறிவின்) கனிந்த பார்வை
யால் படிப்படியாக, படிப்படியாக, செயல் இழந்து
தர்மத்துடன் (அறிவுடன்) கலந்து
மயமாகி விடும் என, ஞானிகள் சொல்வர்.



வேகம் அடங்கினால் (182)
மனம் கேட்கும்
இறைக்கருணை கருத்தால் அடங்கும்.
வேறு வழியில் யாரால் அடங்காது.
ஏழும்! பதினோராக! இருந்து
மோகம் மனங்கள்! ஒன்றுடன்
ஒன்று மோதி அழிவைத் தேடிக்கொள்ளும்
இரண்டும் சாட்சியாய் தர்மம் நோக்கும்.

இந்த தர்மம் எப்படி செயல்படுகிறது என்றும்?

அதர்மம் எப்படி செயல்படுகிறதென்றும்?

ஒரு ஸ்ரீ மஹாத்மா கேள்வி கேட்டார்? அக்கேள்வி
எப்படி அமைந்ததென்றால் :— மனம்! அறிவு! பேரறிவு!

ஆம் மூன்றும் தானே! தோற்றம்! இரும்பு! இயக்கம்

பேரறிவு அறிவு மனம்

என உரைபடுகிறது. இவை மூன்றின்
மூலம் என்னபாபா?

பதில் :— பயனுள்ள கேள்வியே. கவனம் தேவை.

ஆம் மூன்றின் அடிப்படை தோற்றம்!

1 மனம் என்றால் அதன் இயக்கம் நான் ஆகும்.

2 அறிவு என்றால் ,, ,, நாம் ,,.

3 பேரறிவு என்றால் இயக்கம் இல்லாத
தோற்றம் & இரும்பு! மட்டும் உடைய யாம் ,,.



எதிராளி அமைதி & சாந்தியுடன் இருக்கால் (183)
அவனிடம் இவன்
வாக்கும் செயலும் எறி
பந்து போல திரும்பி வந்து
தாக்கி இவனை அழிக்கும்.
அவனுக்கு கர்மா பெருகாது இவனுக்கு
கர்மா பெருகும். சர்வார்ப்பணமே இதற்கு சிகிச்சையாம்.

(1) இவைகள் முறையே: நான் என்பது ஜீவனின் (மனம்)
தோற்றம் & இருப்பு & இயக்கம் ஆகும் என உணர்க.
கித்தனித்தன்மையில் (அஹங்காரம்!
அதிகாரம்! ஆதிக்கம்! எழுச்சியின் வேகம்!
இந்த நான்கும்: இறுகி எண்ணம் முந்தி அழிவுப்பாதையை
நோக்கி வெகு வேகமாகச் செல்லும் என அறிக.

(2) நாம் என்பது ஈசனின் தோற்றம் & இருப்பு &
மாயா இயக்கம்! ஆகிய மூன்றும்.
இது இருமையில் ஜீவாத்மா & பரமாத்மா!
என்றறியவும்: ஒருமையாய் சத்ய குணமாய்
சாந்தி
அமைதி பாதையில் செல்லும்.



நான் ஒழிந்து (184)
நாம் ஆனேன்
அங்கு இருமை நீங்கியால்
ஸ்ரீபகவானையும் நம்மோடு
சேர்த்துக் கொண்டதால்
ஜீவகர்த்ருத்வம் நாசமாகும்.
மனோ நாசம் ஞானாங்குரம் சர்வநாசமாகும்.
என உணர்கம்.

இவன் இந்த ஜீவாத்மா / தனக்கு இருக்க இயலாமல்
பரமாத்மாவையும் / தன்னோடு இணைத்துக் கொண்டமையால்
சந்தேகம் / கவலை / கலக்கம் / பயமின்றி / சம்சாரம் ஜெயிக்கான்.
இவனுடைய மூல மந்திரம் ஏல் வா ம் தி யே! ஆமெ.
இதனால் ஜீவாத்மா / செயலற்றவனாகி விடுகிறான்.
இவன் (நா)(ன்) & (எ)(ன)(து) நாசம் செய்து,
அதனால் ஜீவகர்த்ருத்வத்தை " " ;
ஸ்ரீ பகவத் சொரூபத்தை / பெறுமல் ;
ஸ்ரீ பகவத் ஞான ஜய வத்தைப் / பெற்று விடுகிறான்.
ஆகவே (நா)(ன்) அழிந்து (நா)(ம்) ஆனேன்
ஸ்ரீபகவத்ஞானுபவம் / பெறுவாம் என ஸ்ரீமகான்கள் வாயிலாக அறிகிறோம்.



பரமாத்மாவிடம் 185 மூா யா இருப்பதாலும் வேகம் இல்லாமையாலும் ஜீவாத்மா பக்குவமுடன் பாதுகாக்கப்படுகிறது.

ஆயாம் என்பது பரசொரூப ஸ்வயம் ஜோதியான இடமாகும். அதை இங்கு உவமானமாக சொல்லும் நிலையில், அதை உண்மையவ்வ! அகண்ட மண்ணகவோ! அகண்ட ஜவமாகவோ! சர்வாத்ம பரவெளியில் சொல்லும் நிலையில்; தாம் தாமான ஓர் தோற்றமும் அகன் மாயா விளைவிக்கு இருப்பும் கூட ஜவமோ அல்லது பாறையோ! கொண்ட நிலையை சொல்லலாம். அதில் இயக்கம் இல்லையென்பதே ஸத்தியம். (இவ்விமையாயவனாது இருப்புத்தன்மையைத்தான் கொடுக்க முடியுமே தவிர இயக்கத்தன்மையை கொடுக்கமுடியாது என்பதே ஸத்தியம்.



பிரணவாஹார (186)

ஒலியால் பார்த்தீர்க்கு இருப்பு உண்டாகிறது.

பார்த்தின் இருப்பால்

பிரணவாஹார மாயா புத்தீர்க்கு ஒலி உண்டானது என உணர்க.

அந்த இருப்புத்தன்மையையும் எப்படி மாயா கொடுக்கிறதென்றால் பிரணவாஹார

ஒலியைத்தான் கொடுக்கமுடியும் என உணர்க.

இல்லையென்றாகில் இல்லையென்பதும்

இ...........ல்...........லை! என வாருங்கள் பகும்.

உண்டு ஆனால் இல்லை. (சொல்வாரும் இல்லை.

அதன் காரணம்:— நீருக்க கொள்வாரும் இல்லை.)

இனி கருத்தை கவனிக்க!!!

இங்கு யா ம் என குறிப்பது எதுவென்றால் ???


தாவரத்தி புரும்! அதன் இயக்கமாயாவும்! அதன்

ஈஸ்வராதிகளும்! அதனால் கோடானு கோடி சூர்ய

சந்திராதி & கோடானு கோடி கோள்கள்! அதனுள்

ஹாங்கும்! துவங்கும்! இயங்கும்✓

வழி வாக்கு இயக்கம்





33 கோடி தேவர்கள்! 48 ஆயிரம் மஹா ரிஷிகள்!

கந்தர்வர்! கின்னரர்! கிம்புருஷர்! இபயம ஸ்ரீ கணமும்

தும்புரு நாரதர்! ஊர்வன! பறப்பன! நடப்பன!

நீந்துவன! கிருமி! கீடக! புழு! பூச்சிகளாகிய!

84 லக்ஷம் ஜீவ கோடிகளுடன்! ம ன ம்!

ப டை த் த ம னி த ஐ னை யு ம்!!!

சேர்ந்து இணைந்த நியதியில்! தாவர வர்க்கங்களும்


எ ல் லா ப து மை க ளு ம் & வா த வா த

பா ண் ட ங் க ள் அ ப ண் ட ங் க ரு ம்!

கா ஜு மி ரு உ யா யு ம்:

பே ரே ம ண ம ய மா கு

உ ண ரு ம் நி ஃ யா யு ம்



184

# எல்லாம் யாமே!!!

என உணர்ந்து சும்மாவே! சுகமாகவே!

மௌனப்பிரம்மானந்தமயமாக அகண்டப் பேரொளியாய் இருப்பதுவே யாம்! என அனுபவ கருத்தாகும்.

யாம் என்பது சர்வ சாட்சி பாவனையாகும்.


" வேதாந்தின் "

" அகண்டான்ம "

அகண்டாகார விருத்தியாகும்.

" அகண்ட ஏகரஸமும்!

அகண்ட ஐக்கிய ரஸமும் ஆகும்.



189

(1) நான்! ஜீவத்வமும்! ஜீவகர்த்ருத்வமும்!!

நாம ரூப! ஜாதி ஜீவ! உறவு! சுற்றம்! நட்பு!
பொன் பொருள் போகத்தின் மோஹ தோஷ குணமாகும்.
வினையின் பற்று வரவு & ஜனனமரண வாயிலாகும்.

(2) நாம்! ஈசத்வமும்! ஈசகர்த்ருத்வமும்!

ஏக குண சொரூபானந்தமாகும். ஜீவகர்த்ருத்வத்தை
நாசம் செய்வதும். பேரானந்தம் நிறைந்ததாகும்.

(3) யாம்! ஜீவகர்த்ருத்வமும் ஈசகர்த்ருத்வமும்!

தாவபாவனையும்! சாட்சிபாவனையும்! சர்வசாட்சிபாவனையும்
சர்வநாசமாகி! எல்லாம் மண்மயமாகி!
மண்ணைப் போல் எல்லாம் இல்லாமையாகி! மண் இல்லாமல்
எவரும்! எதுவும்! இல்லாமலான இயல்பில்

யாம்! அதுவாகவே! இருப்போம்.

190



போதும் என்ற நிறைவு
ஏன் வரவில்லை என்றால்
போலப் பொருளின் இனிமை
மயக்கமும்
நான் எனதின் வெறியான்
வேகமும் ஆங்கு எனை உறுத்த

# துவைதத்திலும்!
# விசிஷ்டாத் துவைதத்திலும்!

காண்பான் காட்சி! போக்கு & வரவு!
கொடுக்கல் & வாங்கல்! இன்பம் & துன்பம்!
நன்மை & தீமை! சுகம் & துக்கம்! நாமரூபம் &
குணபேதம்! விருப்பு & வெறுப்பு! குற்றம் &
குறை! புண்ணியம் & பாபம்! ஜனனம் & மரணம்!
சொர்க்கம் & நரகம்! பந்தமுக்தி & ஆனந்தம்!
என **இரண்டு!** இருப்பதால் அங்கு
அனுபவிப்பவனும் & அதன் பொருளும்!
தோற்றமாத்திரமாய் தோற்றுவதால்
அவை **உண்மையில் இல்லை!**



191

சொல் :- நாமம்.
பொருள் :- ரூபம்.


நாமரூபம், மனவசமாகும்
மனதை நாசம் செய்தாலன்றி
நாமரூபம் நாசமாகாது மனதின் இருப்பு நான் என்பதாகும்.

தாமே தானாய் நமக்கு அன்னியமாய் எவரும் எதுவும் இல்லாமலும்; அகண்ட ஜோதி பிழம்பாய்; ஞான மௌனானந்தமாய்; இருக்க எவரும் விரும்புவதில்லை; பார்க்கவும், கேட்கவும், அதுபற்றிப் பேசவுமே அனைவரும் விரும்புகின்றனர் மனதால்.

சொல்லும் பொருளுமற்று; சும்மா; சுகமாக; இருக்க எவரும் விரும்புவதில்லை.

ஆகவேதான்!

அத்வைதத்தை எவரும் விரும்புவதில்லை; அத்வைதமும் எவரையும் ஏற்பதும் இல்லை.





குறிப்பு :- **மனம்** = விகார ! விவஹார ! விபரீத ! விநோத ! விசித்திர ! விந்தையான !

**நாமரூப** ! கற்பனையைப் பண்ணி

**பேத ! விருப்பு ! & வெறுப்பு**

விலகியே நிற்கும் அத்வைதத்தை ஏற்காது.

(வோத)

**அறிவு = மாயா** வுடன் சம்பந்தம் கொண்டு


**நாமாகிய ! யாம் ! ஈச** கர்த்ருத்வத்தை **(ஜீவ ரக்ஷிப்பை)**

விட முடியாது ! என்ற நிலையில்

சாந்தீ ! அமைதீ ! கருணை ! காருண்யம் ! ஆனந்த வடிவில்

ஸத்வ குணா ! சாட்சிப் ! பாவனையால் இருந்து கொண்டு

அத்வைதத்தை ஏற்காது.



(யோக)

பேரறிவு! = மஹாமாயாவின்

சூக்ஷ்ம சம்பந்தத்தினாலே ஜீவ திருஷ்டி

இல்லாமல்; சர்வசாக்ஷி! பாவனையில்

சர்வாத்ம பாவனை திருஷ்டியால்

பிரம்மானந்த பரனை! ஜெயித்த

அத்வைதத்தை ஏற்கும் என உணர்க.

ஆ....ஹ....ஸ்?

இந்த அத்வைத உணர்வையும்


கடந்து! சொல்லவொண்ணா!

விளக்கவொண்ணா! விவக்கவொண்ணா!

ஸ்வயம் ஜோதி! அகண்டப் பேரொளி!

அத்வைதமுங் கடந்த அகண் இருப்பாகவே!

அதுவே யாம்! யாமே அது! என அனைவருமிருப்பாராக.



(4)

நாம் நேயமுள்ள ஓர்
ஸ்ரீபகவானின்
வேஷம் போட்டு
சினிமா! நாடகம்! T.V.
என நடிக்க ஆரம்பித்தால்
இறை உணர்வு நிலைபெறவிடாது.

194

சரிவர:- இறங்காமல்

# இறை உணர்வு ஏன்!

சரிவர நிலைக்க மாட்டேன் என்கிறதென்றால்:-

**மதப்பற்றும்** ஒரு தெய்வத்தை போற்றுவதும்; மறு தெய்வத்தை தூற்றுவதும்; தெய்வத்தை **வியாபாரப்பொருளாக** ஆக்கிக் கொண்ட தன்மையாலும்; தெய்வத்திடம் **நீ வேண்டும்! உன் கிருபை** வேண்டும்! எனக் கேளாமையிலும் **பிறரையே** கவனிக்கும் **முற்கவனத்திலும்** **இறை** நம்பிக்கை பெறஇயலவில்லை.

” **கிருபை**யும் ”.

முற்கவனக் குற்றம் குறையே காரணமாகும். அங்கும் இறைவன் உள்ளான் என எண்ணுக.



ஓ

A **பரசொரூப** / ஓர் தோற்றமும்;

B **மாயாவின்** / தோற்றம் & இருப்பும்;

C **ஈசனின்** / தோற்றம் & இருப்பு & இயக்கமும்;

D **ஜீவனின்** / தோற்றம் & இருப்பு & மாற்றம் & மறைப்பும்;

ஆகிய இவை **நான்கும்** வாக்கிய விளக்கத்தில்;

A **ஏன்** / தோற்றுகிறது????


B **எப்படி** / இருக்கிறது????

C **எதற்கு** / மாறுகிறது & மறைகிறது

ஓ **மாயாவின் / சூழ்ச்சி** என்ன

இந்நான்கு கேள்விகளுக்கும் சுருக்கத் தெளிவு / விளக்கம் வேண்டுமா? பாபா ஜென

திருச்செங்குடி யாவீ **ஸ்ரீ** ஸ்ரீ மஹாத்மா கேட்டார்!



196

உணர்ச்சி கெட்டால் உணர்வு மேலோங்கும்.

பதில் :- ஓர் **பரஸ்திதி உணர்வை!**

முதலில் உணர்வு பூர்வமாக, உணர்வில் வைக்க வேண்டும்.

அதில் மூன்று முறை உணர்வு! வருவதை கவனிக்கவும்

**இறை!** உணர்வையும்; **பர** உணர்வையும்;

அடங்கிய **ஸ்வய அநுபவ!** உணர்வால்;

(A) உணர்ந்தால் மட்டும், உணர முடியும் என அறிந்து;

நாம! ரூப! குணம்! குறி! காலம்! தேசம்! வர்த்தமானம்!

மனம்! வாக்கு! காயம்! ஆகிய இப்பந்தனையும் கடந்ததான

**பரசொரூபத்திற்கு!** இல்லை! என்றும்; உண்டு! என்றும்; இறை & பர ஒலியால் சொல்லும் ஒன்று;

ஜீவ ஒலி அல்ல!

**அகண்டமண்** அல்லது **அகண்டஜலம்**

என்ற நிலையால்; அது அதுவாய்! தான் தானாய்!

அகண்டப் பேரொளியாய் **ஓர் தோற்றம்!**



(97)

ஏக குணத்தில் ஆனந்தம் உண்டு.
அனேக குணங்களில் இன்பமும் துன்பமும் உண்டு.
மாயாதான்! அவ்வெளவினை
கொடுக்க முடியும் மனதால் கொடுக்க முடியாது இயலாது.

மட்டும்| உடைய தென்றும்; அது காணக் கூடியதல்ல என்றும்; அங்கு தோற்றம் என சொல்வதும் ஓர் உபசார| வசனம் என்பதும் முதலில் உணர்க.

குறிப்பு:— காலாதீத பரம் என, ஒன்றுண்டு! என்பதை நிரூபிக்கும் நிமித்தம், வாக்கிய விளக்க! வரிவடிவம்! ஆகும் எனஅறிக.

அபேதோதுகரான் பின்னும் உலக ஜீவ ஏகசு கதைகள் சொல்ல வசதியாக இருக்கும்.

(B) அப்பரத்தின் நிழலாகிய மாயையால் தோற்றத்தின் இருப்பை| உடைய ஸத்| என ஆனது| என மட்டும் உணர்க. இதுவரை தியரிகளையும் விளக்கமாக கூட அளவு ஜவம் என்பதும் பாரத்து உணர்க.

(C) அசத்தானது போக| மாயாவின்| இன்பத்தின் பின்பால் ஸத்| என்ற சத்| என ஆனது.

இதை நாமரூபம் பெறத்தக்க காரணம்| என உணர்க.



உ

தோற்றம் என ஒன்று உண்டானால் அதற்கு இருப்பும் உண்டாகிறது என ஓர் கேள்வி எழுவாம். அந்நிலை பெற்றவரால் தான் உணர முடியும். மற்ற நிலையில் உள்ளவர்களுக்கு விளக்க முடியாது என்பது நியமமாகும்.

198

இது தோற்றம், இருப்பின்!

இயக்கத்தை (மாயாவினால் இயக்கத்தை) உடைய தாய் ஆனந்தம்! ஒக்கும் என அறிக.


குறிப்பு :- இயக்கத்தை உடையது என்றால் இயக்கம் ஆரம்ப நிலையில்! உன்னதை உணர்க. இயக்கம் ஆரம்பமாகவில்லையென, ஸத்தியமாயிருப்பது.

ஆகஇம் மூன்றுமே ஸத்சித் ஆனந்தம் ஆகும் எனவும் உணர்க.

(D) இங்கு தோற்றம்! இருப்பு! இயக்கம்! என்ற நிலையில் ஜக, ஜீவ, இயக்கத்தின் விளையாட்டு! ஆரம்பம் என்ற நிலையில் இயக்கம் ஆகிறது என உணர்க.


இங்கு விளையாட்டு ஆரம்பமாவதால் ஸித்தே மனம் புத்தி சித்தம்! நிலையில் வருவதும் தாங்கியதால் பொதுவாக மனம்! என்ற ஓர் நாமம் மட்டும் கொடுப்போம். அதுவே சித்தம்! எனவும் ஆகும்.





இவர் தோற்றம் 199 என்பது அகண்டப் பேரொளி ஆகும். அது நான் நாமமாய் இருப் பதால் அதே தோற்றத்தை ஸாக்ஷி என்று இவ்வாறையுடல் தோற்றம் இருப்பு என சொல்லுகின்றனர்.


இவ்வாறான மாதை புதுமைகள் பாண்டங்கள் பண்டங்கள் பதார்த்தங்கள் என, நாம ரூப வேத வேற்றுமையும் இன ஜன குண, பேத வேற்றுமையும் உண்டாக்கி, மேலே கூறிய இன்பம் உண்டானால் துன்பமும் உண்டு ஆனந்தத்தை இன்பம் எனக் காட்டிக் கொண்டு. இந்த அசித் நாமரூபங்களும் நிலை இல்லாமலும் வளர் இல்லாமலும் இருப்பதால் பழையன கழிதலும் புதியன தோன்றுதலும் என அழைக்கப்பெறும் மாற்றம் & மறைவு என்ற நியதி, அதற்கு அழிவு அல்லது நாசம் என, ஓர் குண பேதத்தை உண்டாக்கிக் கொண்டது என, ஸ்ரீமஹான் கனிவாக்காக அறிகிறோம்.



பரம் & (மாயா) மஹத் & ஜகத் & ஜீவ (நிலையில்) !!!! தோற்ற இருப்பு, (இயக்கம்) விளையாட்டின், மாற்றம் & மறைப்பின் (நிலையில்) !!!!! பிரம்மமே! ஐந்து தொழிலாகும். என உணர்க.

அதாவது பிரம்மம் & மாயா & பரமாத்மா & ஜீவாத்மா இவர்களின் கண்ணாமூச்சி விளையாட்டு கண்கட்டின்

அதாவது பிரம்மத்தின் மாயாவால் பரமாத்மாவுக்கு அறிவு நிறையாயும், ஜீவாத்மாவுக்கு மனம் நிறையாயும், அவரவர் கண்கள்!



அவரவரே! கட்டிக்கொண்டு! இருவரும் விளையாடுகிறார்கள். பரத்தையும்! மாயாவையும்! உபசாரவசனமாக முறையாக தந்தை & தாய்! என வைத்துக்கொண்டாலும்; அதே போல்? பரமாத்மாவையும்! ஜீவாத்மாவையும்! ஒரே அம்ச சகோதரர்களாக கருத வேண்டும். இந்த பரமாகிய தந்தையும்! மாயாவாகிய தாயும்! நம்மை! (குழந்தைகளாகிய பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும்) விளையாட விட்டு வேடிக்கை!!!!! பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என உணர வேண்டும்.



உ ஓம்

அப்படியானால் இ....ங்....கு

நீ/வேறு/யாம்/வேறு/மற்றவைகள்! வேறு.வேறு/எனச்சொல்லும் பேதம்!

ஏன்?எப்படி?? எதற்கு???

கேள்வி கேட்க முடியும்??????????????

அது ஓர் கூட்டுக்குடும்பம்/ஆகும்.


இவர்கள் கேள்விக்கு பதில் உரையும்.

(A) ஏன் தோற்றுகிறது என்றால்???????

மனதுடையவர்களுக்கு மட்டும் நாமரூபம்/குணங்கள்!

நிலையில் வினைவிதி விளையாட்டாக தோற்றுகிறது.

(B) எப்படி இருக்கிறது என்றால்??????



(203)

அறிவின்! நிலையால் ரககுணங்கள்

நிலையால் இருந்து, அறிவுடையவர்களுக்கு

சாந்தி & அமைதி & திருப்தி! வடிவில்

ஆனந்தமாய் இருக்கிறது!!

எதற்கு மாறுகிறது? மறைகிறது??

என்றால் ????????????????

மனம் & மாயா / விளையாட்டின்
(ஜீவாத்மா) (பரமாத்மா)

ரஸனைக்காக / பழையன கழிதலும்,
(கோர சாரமாக)

புதியன நிர்மாணித்தலும், (இங்கு அழிவு இல்லை)

என ஆக்கிக் கொண்டு, வினை & விதி என!

உபசார வசனமாக சொல்லிக் கொண்டு.



ஓர் சாதனையாளன் (204)

வெளிக்கு இன்பம்
துன்பத்தை நாசம் செய்து,
ஆனந்தம் அனுபவித்து தேம்
ஏகத்தில் பேரானந்தமும்!
அனுபவிக்க முடியும்.

குறிப்பு:- அறிவின் நிலையில்;
இங்கு இன்பம் துன்பம் இல்லை.

# ஆனந்தம் & பேரானந்தம்!

என **ஜீவ & ஈச**/ விளையாட்டாக விளையாடிக் கொண்டிருக்கிறது

என அறிவு பூர்வமாக உணரவும்.

**மாயாவின்!** சூழ்ச்சி என்னவென்றால்?

மாயா இல்லாமல் **பரம்!** இருமை பெற முடியாது.

,, **ஈசனும்!** இயக்கம் பெற முடியாது.

,, **ஜீவனும்!** குணம் & வினை & விதி பெற முடியாது

இம்மூன்றின் **சூழ்ச்சியில்!**

ஒழுங்காக! பாரபட்ச கோளாறில்லாமல்!!

திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடி!

பகிர்ந்தளிக்கும் விகிதாச்சாரப்படி!

ஒ ழு ங் கு மு றை யி ல்;



இதுபிரம்ம விளையாட்டே

அன்றி (௨௦௫)

ஜீவ விளையாட்டல்ல

என ஸத்தியமாய் நம்புக. இது ஸத்தியம்.

# பர & ஈச & ஜக / ஜீவ & பரப்பிரம்ம விளையாட்டு!

விளையாட்டு முடியாதென்று உணர்க.

ஆகவே எம் ஆனந்த குழந்தைகளே! **காலாதீத பரஸ்வரூபம்!** சும்மாவே/சுகமாகவே!

இருக்கிறதென்று, ஸத்தியமாக உணர்க.

அதேபோல் **நாமும்** (நாம் அனைவரல்ல ஒருவரே என்பதும்)


சும்மாவே/சுகமாகவே! இருக்கிறோம் ஸத்தியமே.

ஆ ............ று ............ ல்

# மனதுடையவருக்குமட்டும்!

(அங்கு மனதுடையவர் ஒருவரல்ல. அனைவரும்)

# மனநோயால்பீடிக்கப்பட்டு!



அ……… நா……… ப……… து ?

நான் எனதை / விட முடியா மையிறுதும்;

ஜீ வ க ர் த் ரு த் வ த் தி னை யு ம்

தம்முற்கவனத்தை / கெடுக்காமையினையும்;

பேதம்! பேதத்தால் விருப்பு வெறுப்பு / விருப்பு வெறுப்பால் குற்றம் குறை

ஸ்ரீபகவான்நம்பிக்கை / இல்லாமையாலும்;

வியாபாரம்! விளம்பரம்! ஆடம்பரமாக / இருப்பதனையும்

துறவறம்வெளிவேஷம் / என ஆகிவிட்டமையாலும்;

பேதமையே சாதனை என்றும், சாதனை வேதனையல்ல என ஆகிவிட்டமையாலும்;

வித்வத்துவமேஞானம் / என ஆகிவிட்டமையாலும்;

படிப்பு & பட்டம் & பதவி & பேர்புகழ் & பணம் & இவற்றின் பி ர வ ர் த் தி யே! சாதனை ஆகிவிட்டமையாலும்;

207



நீ வாழ வந்தாயா? மரணம் சாக வந்தாயா?

அறிஞனே விசாரித்து உரைவாயாக!!

மனம் கலியின் தோஷம்! வக்ர குணமே நோய்!

பிடிக்கப்பட்டு விட்டார்கள் எனை அறிக.

இவர்கள் பயம் எப்படி இருக்கிறது என்றால்:—

ஆத்மஞானம் படித்து அறிந்தாலே போதும்.

" " உணர்ந்து அது ஆக வேண்டாம்.

நாம் அது! அதுவே நாம்! ஏது


ஆகிவிட்டால் நம் நிலைமை??

நாம் என்ன ஆவோம்? நாம் எப்படி இங்கு இருப்போம்?

நம் படிப்பு, பட்டம், பதவி, அந்தஸ்து, கௌரவம்,

இவற்றின் இன்பமயமான வாழ்க்கை! என்னவது???

ஆனந்தத்தை அனுபவித்தறியார்!



நாம் போதனை செய்யும் நம் குரு

ஸ்தானம் என்னவாவது??

நமக்கு ஜே! ஜே! ஜே! போடும் கூட்டம்

இவ்வியானவ், நம்மை எவரும் தீண்டமாட்டார்களோ?

சேய்! சேய்! சேய்! என ஒதுக்கி வைப்பார்களோ?

என்றும் மக்கள் சேவையே மகேசன் சேவை என,

பிரவர்த்தியஸ் விழுவார்களே யன்றி


துறவியின் கடன் அன்பர் பணி என்ற

நிவர்த்தியில் செல்வ இயலாமையிலும்.

என்ன மஹேபயம்! இவர்களை வாட்டு

வாட்டென்று வாட்டுவதால்!!!!!

ஆத்ம நாத அனுபவம் இவர்களிடம் பிரகாசிக்கவில்லை.





இந்த மனோ வியாதி பீடிக்கக் காரணம் - இறை நம்பிக்கை இல்லை.

ஆகவே ,, ,, வேண்டும்.

அந்த இறை நம்பிக்கை எப்படி முழுமை பெறும் என்றால்

**சர்வார்ப்பணம்** ஸ்திரமாக வேண்டும்.

அஹங் ஜீவ கர்த்ருத்வ நாசமாக

அதனால் **ஸ்வரூப ரூப குண விபவ சாக்ஷாத்காரம்!**

இயல்பாகவே பெற முடியும். பின் ஸத்குரு கிருபையால்

பிரம்மான்ம பாவனையாகிய **பிரம்மார்ப்பணம்** **தங்கு** (நாம ரூப மயக்கம்) **தடையின்றி** (விக்ஷேப கலக்கம்) இல்லாமல்.



# அகண்ட பரப்பிரம்மா ஞாந்த சாக்ஷாத்காரம்

தாமாகவே பிரகாசிக்க முடியும்.


மஹாத்மாஜீ! என அவ் ஐக்கியம்! தமிழ் உரையை முடித்தது. முடிந்தது.

அம்மஹாத்மா ஆனந்த பரவசமானார். சிறிது நேரம் மௌனத்தில் இருந்தவர், கண் விழித்தார்.

ஸ்ரீமஹாத்மா :- அன்பான பாபாஜீ! இத்தனை எளிமையாகவும்! இனிமையாகவும்! சுருக்க விளக்கமாகவும்! உண்மையை உண்மையாய் உரைக்க வல்லோர் இக்கலியில் இல்லையென்போம். இன்னும் சிறிது காலத்தில் உமது உள் ஆழ்ந்த அனுபவ ரக்கம்! கருத்துக்கள்! உள்ளவர்களுக்கு மட்டுமே! வழிகாட்டியாகவும்! கைகாட்டியாகவும்! அமையும். என ஆசி வழங்கி, அந்த ரிஷியானவர் மறைந்தார்.


இருப்பது ஒன்றே.
நடப்பது நலமே.

பாபா



ஓர் கேள்வி வந்தது:- மாயாவின்! சுழற்சிகளையும்?

சூரியன்! தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் பூமியோ! தன்னைத்தானே சுற்றிக் கொண்டும், சூரியனையும்! சீராக நேர்கோட்டில் சுற்றி வருகிறது. இப்பூமியானது, தன்னைத் தானே சுற்றுவதால், இரவு பகல்! உண்டாகிறதென்று அறிக. இப்பூமியானது, சூரியனையும் சுற்றி வருவதால், வெய்யில்/ காற்று/ மழை/ பனி! என நான்கு பருவ காலங்கள்! உண்டாகிறதென அறிக. ஒவ்வொரு நக்ஷத்திரமும்! ஒரு சூரியனாகும். எனமட்டும் உணர்க.



212

அதே போல் ஒவ்வொரு சூரியனையும்!

நம் பூமியைப் போன்று, கோடானு கோடி பூமிகளும் சுற்றி வருகின்றன.

கோடானு கோடி சந்திரன்கள்! கோள்கள்!

அண்டங்கள்! சூரியன்களும் வானவீதியில்

தன்னைத் தானே சுற்றிய நிலையிலும், சூரியன்களை


சுற்றிய நிலையில், நீ! தடுமாறாமல்!

ஒரே சீரான கோட்டில்! ஒழுங்கு

முறையில், அருமை! நேரம் கால

தாமதம் செய்யாமல் தங்கள் தங்கள்!

சுழல் சக்கரம்!




மாயா

சக்திக்கு கட்டுப்பட்டு

அமைதியின் ஆனந்தமாக

சுழன்று கொண்டிருக்கின்ற

குறிப்பு :– ஜட சொரூபங்களுக்கு ன

அனந்தமா? என கேட்கத் தோணுதா???

நீயும் மனமற்ற ஜட சொரூபமாக

அறிவான் நிலையிலும், பேரறிவின் நிலையிலும்,

இருந்து,

அவன் அருள் கருணையை பெற்றுவிட்டால்

சிரமஸாத்தியமில்லை ஐஸ்வர்யம்.

பேரானந்தமும் நீ பிரம்மானந்தமும் அடைந்த நிலையில்



இ முன்பக்கத்தில் 214 போட்ட பிரணவத்தின் சுழியே! அனைத்து சுழற்சிக்கும் காரணமானவனை அறிக.

சொல்லவொண்ணா, வாக்கவொண்ணா, உன்னை விளக்கவொண்ணா! நிலையைப் பெறுவாய்.

உன் மனதால் எந்தன் தன் பரம் எனை உணர்ந்து/ மனதை ஆளும் தெய்வம்

இங்கு மாயா சக்தி! எனை மேலே கூறியதை, உன் கருத்தில் கொள். அம் மாயாவே!

# தோற்றத்தில்

ஸ்தைபூரி என்ற நாம உருவும்!

# இருப்பில்

மஹா

# சர்ப்பின்!

# ஆகாயமும்

ஆகும் எனை லக்ஷியமாய் உணர்க.

கோடானு கோடி அண்டங்களும், கோள்களும், சூரிய சந்திர நக்ஷத்திரங்களும் அந்தரத்தில் எந்தாங்குதலும், பிடிமானமும், இல்லாமல், ஒரே சீராக சுழன்று வருவதன் காரணம் → ஆகாயமே ஆகும்.

மேலே கூறிய ஆகாயம்! இல்லாமல் மேலே கூறிய அனைத்து தோற்ற இருப்புகளும்! இல்லாமல் இடமில்லாமல் மறைந்து விடும் எனை லக்ஷியமாய் உணர்க.




பிரணவரூபமாகிய (215)
ஆகாயம் மாயா
அனைத்து அண்டங்களையும்
தாங்குகிறது. அதன் கம்பிக்
கோடாகிய ஒலிகள் அனைத்
அண்டங்கள் ஜட / கட / படம்
இவைகளை, ஸ்ரீ காக்கும் கொடுத்து
ஸ்ருஷ்டிக்கவும்! ஸ்திதிக்கவும்! லயிக்கவும் பண்ணுகிறது.

பரத்தின் மறு வடிவமான! **பரமாணுக்களே!** ஜட சிருஷ்டியாகிய **அண்ட** சிருஷ்டியின் ஆதாரம் ஆகும்.

**ஜீவாணுக்களே!** பிண்ட சிருஷ்டியாகிய **கடபடாதி**களின் அனைத்து ஜீவ சரீரங்களுக்கும் தாவர வர்க்கங்களுக்கும் ஆதாரமாகும்.

அனைத்து அண்ட சிருஷ்டிகளும்! பிண்ட சிருஷ்டிகளும்! **ஆகாயத்தின்!** சுழற்சியால் ஒழுங்காக அசைகின்றன என அறிக.

அதாவது **யோகமஹாமாயா**வின்! கம்பிக் கோட்டில் பிரணவ ஒலியில் நூலில் கோர்க்கப்பட்ட பாசிமணி போல்! அனைத்தும் அமைந்திருக்கின்றன என ஸ்ரீ மஹாத்மாவின் வாயிலாக அறிவோம்.



அதாவது,

விதவித **பாசிமணி** போல் ஓர் நூலில்

**பிரணவத்தில்** இப்பிரபஞ்சம் அனைத்தும்

கோர்க்கப்பட்டிருக்கிறது என்றால் அதன் பொருள் :—

# க்ஷரம் & அக்ஷரம் !!!

அதாவது ரூபமும் ! அதன் பொருளும் !!!

" கோடானுகோடி கோள்கள் ! சூரிய சந்திராதி உலகங்களும் & அவைகளின் இன்னது !

இன்னவை ! இன்னார் ! என விளக்கும் ;


பிரணவத்தின் ! ஒலியான வாக்கும் !

என்றும் ; மற்றோர் நிலையில் கண்ணால்காணும்

அனைத்தையும் **விளக்கும்** வரியும் வாக்கும்

இல்லையானால் மேலே கூறிய அனைத்தும் விளங்காது,

துலங்காது. இயங்காது. எனசத்தியமாய் உணர்க.



217

தோற்றமும் இருப்பும் பரம் ஆகும்.

அதை விளக்கி இயங்க வைப்பது மாயா! ,, .

இவற்றின் ஆரம்பம் ரூபநாமம்! ,, .

,, முடிவு நாமரூபம்! ,, .

பரம்! இல்லையேல் மாயா வுக்கு இருப்பு இல்லவே இல்லை.

மாயா! உண்டாக விளையாது ஆம்;

பரம்! உண்டு! அதை விளக்கவோ!


விளங்கவோ! எவரும் எதுவும்!

இவ்வாண்மையினால் பரம் இல்லை யென்றே சொல்லவாம்.

அதை சொல்வாருமில்லை. அதை ஆராய,

ஏற்றுக் கொள்வாருமில்லை. என்பதே சத்தியம்.

ஸ்ரீ பரபரம்.




6 ஓர் ஸ்ரீமஹாத்மாவின் கேள்வி:- அந்த ஒன்றை!

நாம் அடைந்துவிட்டோம் என்றோ அதுவாகவே நாம் இருக்கிறோம் என்றோ கூற முடியாது. ஆனால் உணர முடியுமே!!!

இங்கு ஆத்மாவின் நிலையில், அவ்வுணர்வு எப்படி இருக்கும்??? அவ்வுணர்வை, தெளிவுபடுத்த இயலாதென்றால், நம் முயற்சியும் பயனற்றதே!

(A) லௌகீகத்தில் கண்ணால் காணும் நிலையில், போக போக்கிய, இன்பம் அனுபவிக்கமுடிகிறது. அது ஜனன மரணமாக இருந்தாலும், நாமரூபமாக தோற்றுகிறது. அங்கு சொல்லும் பொருளும் உண்டு.

(B) தெய்வீகத்தில், நமக்குள் பதிகாட்டிகளாகிய ஸ்ரீநாதையர்! ஏதோ ஓர் நாமரூபமென,






ஸ்ரீபகவானோடு தொடர்பு கொண்டு, கண்டும்!
விளையாடியும்! உறவாடியும்! உரையாடியும்!
மோனநிலை/அனுபூதிகள் என்றும் கேள்விப்
பட்டிருப்போம். புராண & இதிகாச & பக்தி கதைகள்
மூலமாக, ஓரளவு நம்பிக்கை வருகிறது.

சொர்க்கம் என்றும், பரமபதம் முக்தி
என்றும் பேசப்படுகிறது. நம் முன்னோர்களும்
நம்பி, அதையும் ஏற்றுக் கொண்டனர்.

ஆ..........ன..........ல்?

இந்த **பரமார்த்தகம்**/ எனச் சொல்லும்
**ஜீவன்முக்திக்கு**/ மட்டும் ஏதேனும்
**தடயம்** / உண்டா பாபா???????

பேங்க் பாஸ்புக் நம் கையில் இருப்பதால், பேங்கில்
நம் இருப்பு என்ன? என உள்ளங்கை நெல்லிக்
கனி போல், பளிச் சென்று தெரிகிறது.



220

பரமார்த்திக பாஸ்புக் ஸத்குரு விடம் தான் உண்டு என்றும்; அது காணக்கூடியதல்ல என்றும்
உள் நம்பிக்கையே அதன் மூலதனம் என்றும்; சொல்லி விடுகிறீர்கள்
அந்த நம்பிக்கை எப்படி பெற முடியும்?
அந்த ஒன்றை நாமரூபமும் இல்லை என சொல்கிறீர்கள்
"சூட்சும வடிவ ஸ்ரீபகவானும் அங்கு"

இதை வைத்து எம் கேள்விகள் என்னவென்றால்?

(A) பரமார்த்திக பயிற்சியின் முன்னேற்றம் எது?

(B) அவனுடைய படிப்படி அனுபவம் எப்படி இருக்கும்?

(C) உலகில் அவன் மற்றவர்களால் எப்படி மதிக்கப்படுவான்?

(D) அவனுடைய மரணம் / மதிப்பு / மரியாதை / என்னவாகும்?

(E) ஜீவன்முக்தி அடைந்து விட்டோம் என்பதற்கு, ஏதேனும் தடயம் உண்டா? இந்த இந்து விடை வேண்டும் பாபா?

கேள்வி தருக்கம்



221

A

கேள்வி :- பரமார்த்திக பயிற்சியின் முன்னேற்றம் எது?

பதில் :- கவனம் தேவை. விளக்குகிறேன்!

புண்ணியம் & பாவம்! என இரண்டு உண்டு.

தெய்வீகத்திற்கு ஸத்திய! வாக்கும் &

தர்மம்! என்ற செய்கையும் உண்டு.

இவை இரண்டும் நிஷ்காம்யமாக செய்யப்

படுவதால் ஸத்கர்மாவும்! ஆவீடு.


ஆனால் உயரிய பிறவியும் & பரமுக்தியும் உண்டு.

இவ்விரண்டிலும்! அறிவில்

சபலம் உண்டானால், அங்கு மனம்! உண்டாக

வாய்ப்பு உண்டு என அறியவும். அறிவு மனமானால்,

தாழ்ச்சியான ஜனனம் தொடரும். என அறிக.



௨௨௨

ஆனால் பரமார்த்திகத்திற்கு! ஸத்தியதர்மம்

# முற்றும் பெற்று! முடிவுற்றதால்;

எந்தப் பிணைப்பும் இல்லாமல், ஜீவன் முக்தி! ஏதுவாகிறது என உணர்க.

ஆகவே இப்பரமார்த்திக பயிற்சியின் முன்னேற்றம் இச்சாதகனுக்கு –

(1) நாமரூப! சொந்த பந்த பாசம், பற்றின், பிணைப்பின், பிரிய வாசனை! மிக மிக குறைவாக இருக்கும்.


காவக்கிராமத்தில் உயர்ந்து வரும்.

(2) தீர்த்தம் மூர்த்தி ஸ்தலம், இவைகளில், அதிக நாட்டம் இராது. சமயச் சடங்குகள் இராது.

(3) எல்லோரும் நல்லவரே! நம்மவரே! எல்லாம் தெய்வமே! என்றதிட உறுதி குலையாமல் இருக்கும்.

(4) மூர்கணம்! வெகு வெகு குறைவாயிருக்கும்.

ஆகவே விஷய மறதி! அதிகம் உண்டாகும்.





(5) பேச்சு வெகுவாக குறைந்து காணப்படும்.

தெய்வீக பரமார்த்திக வார்த்தைகள் தவிர, லௌகீக வாக்கு வெகுவாக குறைந்து காணப்படும்.

இவை ஐந்தும் பரமார்த்திக பயிற்சி உள்ளவனிடம் சிறப்பான அம்சம் என உணர்க.

(B) கேள்வி :— அவனிடம் படிப்படி அனுபவம் எப்படி இருக்கும்?

பதில் :— (1) இன்பதுன்பம் அவனைத் தாக்காது.


(2) பெண் சபலம்! மயக்கம்! இராது.

இவைகளில் பிராரப்தம் ஆனந்தமாக முடியும்.

(3) பொறுமையும் சாந்தமும் இயல்பான குணமாகும்.

(4) ஸத்குருவின் பாக்கிய சித்தத்தை கண்ணை இமை காப்பது போல் பாதுகாப்பான்.

(5) வாக்கில் இனிமை! வார்த்தையில் எளிமை! சாதனையில் பொறுமை! இவைகளில் ஆனந்தம் குறையாமல் இருப்பான்.



224

இவை ஐந்தும் அவனுடைய படிப்படி அநுபவங்களாகும்.

கேள்வி: உலகில் அவன் மற்றவர்களால் எப்படி மதிக்கப்படுவான்.

பதில்:- இது ஓர் முக்கியமான கேள்வியாகும்.

இச்சாதகன் உலகிற்காகவும் பிறருக்காகவும் வாழ்க்கை வாழ்வதற்கே என வாழமாட்டான்.

நாம் சாதிக்கவே வந்தோம் என்றும் வாழவரவில்லை என்ற திட உணர்வு உணர்ச்சியல்ல இறைஸ்ரீகுரு மனம் சாகவே வந்தோம் நம்பிக்கையுடன் இணைந்து பிணைந்து ஒன்றுபட்டு அமைந்திருக்கும்.



உயர் பிறவி (௨௯௫)

① மனுஷ்ய ஜன்மம்.
② பக்தனாகவும்.
③ பந்த முக்தியும் கிடைக்கவும்.
ஆனால் ஜீவன் முக்திக்கு மட்டும் ஓர் ஸத்குருவின் கிருபை பெற வேண்டும்.

உலகில் பிறந்தவர்கள் (உறவு! சுற்றம்! நட்பு!)

இவனை! புரிந்து கொள்ள முடியவே முடியாது.

வினைவிதி! பக்தால் விலகுவர்.

பூர்வசுகிர்தத்தால்! இணைவர்.

பிரிந்தவர்களால் எந்த கோளாறும் இல்லை.


இணையவர்களால் ,, பந்தமும் சேர்மா ,,

இவனை மதியாதோர்! மனம்! வினை! விதி!

நீ காலன் வழியில் சிக்குகின்றனர்.

இவனை மதித்தோர்! நிஜ கண்டு,

மாயாவின் சகாயத்தால், உயர் பிறவியோ! பந்த முக்தியோ! அல்லது அதீத நிலையால்




பரமகுரு! கருணையால் ஜீவன்முக்தியோ! அவஸ்யம் பெறுவர்.

மற்றவர்கள் பார்வைக்கு இவன் ஒன்றுக்குமே உதவ இயலாதவன்! எனத் தோன்றும். (கர்மா சித்தாந்த விவரணமயினால்)

இவன்தான் உலகின் ஆதாரம்! அறிவிலிகள் அறியார்.

இவனாலேயே இவ்வுலக ஜீவ இயக்கம் இயங்குகிறது என, அறிவிலிகள் அறியார்.

இவன்! ஒருவனுக்கு ஒருபிடி உணவு கொடுத்தால் உலகின் 84 லக்ஷம் ஜீவகோடிகளுக்கும்! உணவு பரிமாறுகிறோம். என்பதை அறிவிலிகள் அறியார்.



இவனை ஓர் உதவாக்கரை! என
உலகோர் மதிப்பர் (அவமதிப்பர்)
அவர் அவரே! உதவ அக்கரையே
எல்லோரும் நல்லவரே என ரூ
மதிப்பான்! (மரியாதை செலுத்துவான்)
இவன் உலகை (ஜீவர்களை) வெறுப்பதும் விரும்புவதும்
இல்லை. எவ்வாறு! இயக்கத்தில் சுறுசுறுப்பாகவும்!
இயக்கம் அற்ற நிலையில் மௌனமாகவும்! உணர்ந்து
ஆனந்தம் ஒன்றே அடைகிறான்.
முடிவாக சொல்வதென்றால்? ஞானி! ஒருவனால்
தான் இவ்வுலகம் இருக்கிறது. இயங்குகிறது.
விளங்கித்துலங்குகிறது எனஸ்ரீமஹான்கள் சொல்வர்.



# இவன்! உலகை விரும்புவதில்லை

இவ்வுலகமும்! அவனே! ,,

காரணம் :— நாம ரூபமாக இருந்தால் அது உலகம்.

நாம ரூபம் மறைந்தால் அதுவே பிரம்மம்! அவனே.

ஆகவே ஒருவனுக்கு! நாம ரூபம்! தேவை இல்லை.

ஆகவே அவன் இங்கு மதிப்பு! மரியாதையை! விரும்புவதில்லை.

(D) கேள்வி :— அவனுடைய மானம்! மதிப்பு! மரியாதை! என்னவாவது?

பதில் :— ஒரு ஞானியானவன் தன்! மானம்! மதிப்பு & மரியாதை! இவைகளை விரும்புவதில்லை. எனவே சொல்வதை விட எல்லாம் போதும்! என ஆனந்த நிறைவு கொள்கிறான் அச்சமயமே!

யோக! மாயாவின் கருணையினால்!

யோகமாயா! இவன் உபாசனை சித்தி!



பர ஞானிக்கு தான் (229)

ஸ்ரீ பகவானும்

அஷ்டதிக்கு பாலகர்களும்!

அந்த ஞானியின் தாவத்தை!

ரக்ஷிப்பார்கள் எனவே யாரும்

தொல்லை வேண்டாம்.

அத்வைதம் உணர்ந்து அனுபவம் பெற்ற

இவனுடைய ஜன்மாவைத்தை!!!

த...ம்...மா...ண...மா...க!

தாமே பணவாகரத்துக் கொள்கிறது.

இவனுடைய தால போஷணையை!

" உபாசன ப்ரீதியும்!

உணவு! உடை! இருப்பிடம்! அடங்கும்

இவனுடைய தால ரக்ஷிப்பை!

அஷ்டதிக்கு பாலகர்களும்!

இவனுடைய வினை! மானம்! விதி! முடிந்து விட்டதால்

பரகருணையின் நியதிப்படி இவன் தாவம் அதிசாரம்

செய்ய வேண்டும். இவ்விதி என்ற காவல் கடந்த

நியதி நடைபெறுவதால் இவ்விதம் இவ்வாறு நடை

பெறுகிறது என ஸ்ரீ மஹாத்மா வாக்காக அறிகிறோம்.

போஷிணை = உணவு. ரக்ஷிப்பு = காவல்.



இ எவராயினும் அந்த (230)
பக்குவ ஆன்மாவுக்கு
அவர்களுக்கும் இதுதான்
இங்கு எப்பேதமும் இல்லை. பா
கருநெறியில் நாளுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

இந்த ஞானியின்/ தூலத்திற்கு அரணைகள்
பாதுகாப்பாக கவசமாக!!!
அமைந்து விடுவதால் தம் உடல் மீதும்!
அக்கறை இல்லை. அவ்வுடல் சஞ்சாரம் செய்யும்
உலகின் மீதும்! எண்ணம் வருவதில்லை. காரணம்
அந்த சங்கல்ப விகல்ப மனம்!
இல்லை. அம்மனமானது! அறிவோடு!
கலந்தது! ஆத்மாவோடு கலந்து விட்டது!
அவ்வறிவோ பேரறிவோடு! கலந்தது.
பரமாத்மாவோடு கலந்து விட்டது. அந்த
பரமாத்மாவோ! பரப்பிரம்மத்தோடு!
காலாதீத பரம்பொருளோடு!
கலந்து! கொண்டிருக்கிறது. கலந்து விட்டது.



அஷ்டதிக்கு பாலகர்களும் பரிபக்குவாளும் 231 ஓர் நாளியின் ஆவர்த்தை ரக்ஷிக்காளும்; அவனுடைய அன்பர்களின் வினையை அவன் அனுபவித்தே ஆகவேண்டும்.


நிவர்ந்து கொண்டிருக்கிறதென்றும், கவர்ந்து விட்டதென்றும், இருபொருட் வாக்கும் வரியும்! கர்த்தன் காரணமாவது: உங்கள்! அனைவரையும் இணை சேர்த்து களைப்பதற்காகவே! அவ்வாறு சொன்னோம்.

2 கேள்வி:- ஜீவன் முக்தி அடைந்து விட்டோம் என்பதற்கு ஏதேனும் அடையாளம் உண்டா???

பதில்:- இது நல்ல பயனுள்ள கேள்வியே!

கவனம் தேவை:-

1 ஸத்குரு! தர்ஸனம் கிடைத்துவிட்டாலே, ஜீவன்முக்தி! பெற்று விட்டோம் என்றிட உறுதியின் நம்பிக்கை! பரிபூரணமாக வேண்டும். இருக்கும் உன் சந்தேகமே ஜகம்! நம்பிக்கையே பரம்.



2 சொந்த, பந்த, பாசப், பற்றில், நடிப்பான்

**கடமை** என, மயங்கமாட்டான்.
மயங்க முடியாது. மயங்கக்கூடாது. மயங்க இயலாது.

## 3 வாக்கு அடங்கியே வரும்!

கடும்! சுடும்! கபட! வார்த்தை வராது.
எதிர்வார்த்தை! எதிர்ந்த வார்த்தை பேசமாட்டான்.
பிறர் பேசினாலும், பணிந்து போய்விடுவான்.

4 அரசியல்! சினிமா! கேளிக்கை!
வார்த்தைகள் நிகழ்ச்சிகள் இருக்காது.

**கர்மா!** சம்பந்தத்தினால் அவசியம் பற்றப்படாமல் வரலாம் தோஷமில்லை.

## 5 சமயசடங்குகள்

விளக்கம் தெய்வீகம்

குறையும் போது, அனுபவம் பெருகும்.
நின்றுவிடும் போது, " " முற்றுப்பெறும்.



கண்ணிருந்தும் குருடாய் (233)

முதலில் புதுமைகள் தோன்றும். இரண்டாவது பழமை ஆட்டமாகத் தோன்றும். மூன்றாவது மெய்யமாக உணர முடியும். பின் மறைந்த பரமாகவும் பரமான நாமமாகவும் ஆனந்தம் அடையலாம்.

(6) இவனுக்கு **தனித்து**| அனுபவம் இராது. இருக்கக் கூடாது. இருக்க முடியாது. இருக்க இயலாது.


காரணம்

ஸ்வய அனுபவமே இவன் ஸ்தானம் ஆகும்.

தன்னிருந்தானே எவ்வாறு காண்பான்? தனக்கு அன்னியமாய் எவரும் எதுவும் இல்லாமையால் வாக்கோர் வரியோ! இல்லாமையினாலும், சொல்வாரும், அதை ஏற்றுக்கொள்வாரும் இல்லாமையினாலும்,

**தாம்தாமான**! பிரம்மானந்தத்தை! விளக்க இயலாமைக்கு இந்த ஏழையை மன்னிக்கவும்.

(7A) **கண்** இருந்தும் குருடாய்: **நாமரூப**| பேதம் விருப்பு வெறுப்பு குற்றம் குறை தோற்றமில் புதுமைகள் & பழமைகள் விளையாட்டாக! தோற்றுகவ் ஓர் **பரவச**| ஆனந்தம் தோற்றும்.



234

B **காது!** இருந்தும் செவிடாய் :- மிருகங்கள் & பறவைகள் அவைகள் நிலையில் பேசும் பேச்சை சப்தித்தால், எவ்வாறு அர்த்தமோ & அனர்த்தமோ தோற்றதோ!!! அதே போல் உனக்குத் தெரிந்த பாஷையில் பேசாமல் தெரியாத பாஷையில் என்னதான் கத்தினாலும் எவ்வாறு அர்த்தமோ & அனர்த்தமோ / தெரியாதோ?

அவ்வாறு **ஒலிஅலைகள்!** ஒன்றுடன் ஒன்று மோதுவதாக தோற்றும்.

ஓ **வாய்!** இருந்தும் ஊமையாய் :-

சொந்தபந்தபாச பற்றுடன் வாக்கு வரவாகாது.

" ஊர் & உலக வம்பு பேச்சுக்களும் "

கடும்! சுடும்! கபடம்! எதிர்! எரிந்துவாக்கும் "



ஓ

அவஸ்ய வாக்கு:- ப்ராரப்தம் ஆகும். அநவஸ்ய வாக்கு:- ஆகாமியம் ஆகும் என உணர்க.

வரவாகாது! என சொல்வதை விட, வராது. வரமுடியாது! வரக்கூடாது! வர இயலாது என்றும் சொல்வோம்.

அநவஸ்ய வாக்கு வராது. இறை&குரு&பரம் சம்பந்த வாக்கு வரும். அந்த வாக்குகளும் நிலைகண்டு வரும்.

நான்/எனது/ அற்ற நாம் என்ற நிலையில், வாக்கு வரமாம்.

8 மூர்கவைத்தால் வரும் சொல்லும் & செயலும்! குறைந்து குறைந்து குறைந்து குறைந்து வரும்போது, அனுபவம் பெருகும்.

அனுபவமே முடிவுறும்! போது அனுபவம் நிறைவு பெறும்.



ஓ நாம் அடங்கும் போது தான்! உலகம் நம்முள் ஒடுங்கி மறைந்து/விடும் இரகசியம்.

9 வெட்கம்! கூச்சம்! மானம்! சூடு! சுரணை! லஜ்ஜை! குறைந்து குறைந்து வரும் போது அனுபவம் பெருகும்.

கர்ணா! கெடுநாசமானதில் அனுபவம் முற்றுப் பெறும்.

10 மனம் வினை விதி! வசத்தால் கட்சிகள் நிகழ்ச்சிகள் நடைபெறும் போது, உணர்ச்சிக்கு இடம் கொடாமல் உணர்வு மேலோங்கினால்! அதாவது எல்லோரும் நல்லவரே! நம்மவரே! எல்லாம் நலமே என

நாம் அடங்கும் போது நான் அனுபவம் பெருகும்.


இந்நிலை முற்றுப் பெறும் போது, நாமம் ரூப ஜகஜீவ! தோற்றம் அனைத்தும், சிற்ப சித்திரமாக! தோற்றும் போது, சாதனை முற்று பெற்றதை உணர்க.



உலகம் சிற்பம் & சித்திரமாக
தோற்றும் போது,
விசித்திரம் / விநோதம்.
தோற்றுது. மாறுத
இயல்பான நம் இருப்பை
ஆனந்தமாக உணரவாம்.

வைத்தியம் :- ஓஎம் அன்பும் / அறிவும் / நிறைந்த
மஹாத்மா ஜீ / இப்படி 10 நிலைகளில் / ஓர்
சாதகனுக்கு ஸ்வ ய அ னு ப வம் கிடைக்கால்
அவன் நாம் ஜீவன் முக்தி நிலை பெற்று விட்டோம்
என ஆனந்தம் அடையவாம். என கூறிக்கொண்
டிருக்கும் போதே அம்மஹாத்மா / பிரக்ஞை அற்றவராய்
சமாதிநிலையில் (ஆனந்த பரவசத்தால்)
அவ்வைத்தியத்தின் மடியில் சாய்ந்து விட்டார்.
அவ்வைத்தியம் / அவர் தலையை வருடி விட்டு நிலையில்,
(பெரு)
அவர் சகஸ்ராரத்தில் கட்டை விரலால் /
சற்று அழுத்தமாக, அழுத்தி தேய்த்த உடன். அவர்
புன்முறுவலுடன் கண் விழித்தார். பின் எழுந்தார்.

ஸ்ரீமஹாத்மா :- அன்பான / அறிவான / அந்த இன்று /
எளிமையான / பாபாஜீ / தாங்கள் உணர்த்தியது!
(மனதில் இல்லை)
எம் உள்ளத்தில் இல்லை என் அஸலிஸ்!
பசுமரத்தாணி போல் / பதிந்து விட்டது. அதாவது,



(238)

அந்த **விந்து!** எம் அறிவில் ஊன்றப்பட்டுவிட்டது.

**ஜலம்!** விட வேண்டியதோ! (கண் காணிக்க வேண்டியதோ?)

**உரம்!** போட வேண்டியதோ! (உன் உணர்வை கொடுக்க வேண்டியதோ?)

**கன்னய!** திருஷ்டி எறிய வேண்டியதோ! (மனதை சாகடிக்க வேண்டியதோ?)

**பலன்!** வர வேண்டியதோ **எம்மை** (ஆத்மாவை)

**உம்மோடு!** (பசத்தோடு) (சேர்த்து வைக்க வேண்டியதோ?)

**ஐக்கியம்!** ஆக்க வேண்டியதோ?

உம் வரஅபிபாலம் **எல்லாம் நீயே** என!

முடித்தார். முடிந்தார். முடிவுற்றது.

இப்போது ஒன்றே.

நடப்பது நலமே.

(கடைசி வாக்கியம் உபசாரவசன மாகும்)

**பாபா.**



மன முயற்சி இறை நாட்டமாகும்.
அறிவின் முயற்சி பர நாட்டமாகும்.

குழந்தைகளையும்! பெரியவர்களையும்!

(வயதில்லா) தெய்வத்தையும்! காணச்
செல்லும் போது, வெறும் கையுடன்
செல்லலாகாது. எதிர் பார்ப்புடனும்.

காரணம்:— அங்கு சைத்தன்யம்!
திரைமறைவின்றி இருக்கும். நீங்கள்
செல்லும் நிலையை அனுசரித்து
பலன்! முயற்சி அயற்சியின்றி! இயல்பாக
கிடைக்கும்.

அம்மூன்றிலும் பர கருணையானது!
இறை கருணை நிலையில் தம் மாயா வரவ்!
நடுகண்டு வாங்கும் & இயங்கும்!
இங்கு வினையோ & விதியோ! காரணமாகாது.
மனமுயற்சி & அறிவின் முயற்சி காரணமாகும்.



வைப்ரேஷன் என்பது ௨௪௰

மஹாபவம்

நாசமரண பின்மறுவிடி

ஆன்மாஸ்வயமாக பிரகாசிப்பதை

ஆத்ம பவம் என ஸ்ரீமான்கள் சொல்வர்.

# (7) ஸ்ரீ ஸ்ரீ குருநாதரின்!

அமுதவாக்கு இதுவாகும்.

# ஓர் உண்மை பக்தனோ!!! ஹே திருவடி!!!

# உணர்ந்த ஞானியோ!!!

அவர்களிடம் அவர்கள் அறியாவண்ணம்!

ஓப்பெரும் சக்தி வெளிப்படும் என உணர்க.

பக்தனிடம் இறை கருணை நிலையில் யோக மாயாவம்! ஞானியிடம் பர கருணை நிலையில் யோக மாயாவம்! தம் இயல்பான காரியத்தை இக்கலியுகத்திற்காக பண்ணும் என அறிக.

இது அதிரகஸ்யமாக பாதுகாக்கப்பட்டு வந்தது.



உண்மைபக்தனும் ௨௪௧

மனோநாசமாகி

அறிவு ஆநந்தமாகு

பிரகாசத்தால்

ஆத்மபலம் பெறுகிறது எனஉணர்க.

அன்பர்களுக்காக, இன்று வெளியாகிறது.

காரணம்:- கலிகோரம் அதி உக்ரமாய்

தாக்கப்படுவதால், வெளியாகிறது எனஉணர்க.

அறிந்தும்! அறியாமலும்!

செய்யும், பாபகர்மா நிவர்த்திக்காக

இது வெளியாகிறது எனஉணர்க.

மேலே கூறிய இவ் இருவருக்கும்!

மூன்று நிலையில்,

அவர்கள் வைப்ரேஷன்!

வெளியாகி, ஜீவ ரக்ஷிப்பின் நிமித்தம்

இக்காரியத்தை செய்யும். செய்தே ஆகவேண்டும்.


இது கலியுக தர்மத்தின் நீதிக்கு நியதியாகும்.

(1) கரத்தின் அபயஸ்தமும் & ஸ்பர்சமும் ஆகும்.

(2) வாக்கின் ஒலி நாராயண & நவம் பெறுவாய்.

(3) கடாக்ஷபார்வை நேரடிப்பார்வை

ஆகிய இம்மூன்றும் எனஉணர்க.



உடல்

இவ்விருவரும் இணைந்து வியாபாரமாகவோ! விளம்பரமாகவோ செய்வதில்லை. செய்ய முடியாது. இயல்பாக நடக்கின்றது

நலம் பெறுவதால் அவர்களும் இதை அறியார். அவனே அறிவான். அவர்களும் இதை அறியார்.

1. கரத்தின் அபயமும் ஸ்பரிசமும்:- குடும்ப பிராரப்த வினையை **பக்குவ** படுத்தும்.


2. வாக்கின் ஒலி:- நாராயணா என்றால் சர்வ மங்களமும் **உண்டு**! கண்டு உணர்ந்தவர்களாக என்றும் நலம் பெறுவாய்! என்றால் **மனோ சங்கல்பம்** இருந்து விடுபடுவாய் என்றும் பொருள் படும்.

3. கூர்ந்த பார்வை:- **வினை**க்கு ஏற்றவாறு **மனதை**யும்; மனோ **நிலை**க்கு **வினை**யையும் பக்குவப்படுத்தி **மாற்றி** அமைக்கும் என பொருள் படும்.

குறிப்பு:- பரிஹாரம் என்றால் மாற்றி அமைக்கும். ஆகவே இம்மூன்றும்! மனம் வினை விதி கண்டு ஒன்றுக்கொன்று நிலை கண்டு மாற்றிப் போட்டு **சிரமநாஸ்தி** பண்ணும் ஸ்ரீராமஜெயம்

எல்லோரும் நல்லவர்களே. எல்லாம் நன்மையே என எண்ணு. நலமே காண்பாய். உண்பாய்.

ஓம்



8

தாவ பாவனையாகும்.

① ஜீவநிலை:- இது துவைதம் ஆகும். இது நாம ரூப குணம் குறியின் மனோபாவனையாகும். இது புண்ணிய பாப சம்பந்த ஜனனமரணம் ஆகும்.

② ஈசநிலை:- இது விசிஷ்டாத்வைதம் ஆகும். இது சாட்சி பாவனை ஆகும். சாட்சி விருத்தி எனவும் சொல்வர். (மனம் படைத்த மனித இனத்திற்கு மட்டும் சாட்சியாகும்) இங்கு ஈசனும் ஜீவனும் சமமான நிலையாகும். இங்கு நாமரூப இன ஜன குண பேதம் தெரியாமல், எல்லாம் பொம்மைகளாகவும். பொம்மைகளின் ஆட்டபாட்டமாகவும் தோற்ற நிலையாகும். இங்கு சாந்தி, அமைதி, பொறுமை, பணிவு, எளிமை, கனிவு, அனைத்திலும் போதும் என்ற நிறைவின் ஆனந்தம் உண்டு. (இது பேரானந்தமே)



கணக்குக் கணிப்பது:—


மனைவி புண்ணிய பாவத்தையும் அறிவின்றி (இப்பு) ஸுத்திய தர்மத்தையும் முறையாக கவனித்து தம்மாயா விஹல் விகிதாச்சாரப்படி பகிர்ந்தளிப்பதாகும்.

3 பாரில்: — ஓர் நிலையில் இது அத்வைதம் ஆகும்.

இதை அகண்டாத்ம பாவனை என்றும், சர்வசாட்சிவிருத்தி என்றும், அகண்டாகார விருத்தி என்றும், மூன்று நிலைகளில் சொல்லுவார். இம்மூன்றும் அத்வைதத்தை உணர்ந்தாலேயன்றி, அத்வைதமாகாது. இந்த சர்வசாட்சி பாவனை என்பது மனிதனை உட்பட, 84 லக்ஷம் ஜீவகோடிகளுக்கும் சாட்சியாகும்.

குறிப்பு: சாட்சி என்பது பேதம்! இல்லாமல் கண் காணிப்பதாகும். ஆனால் கண்டிக்காது. தண்டிக்காது.

விருத்தி என்பது சாட்சி பாவனை மனிதனைத்தையும் சர்வசாட்சி பாவனை அனைத்து ஜீவனைகளையும் நாம ரூப குணம் கொடுத்து சாட்சியாக தன் தாரணைக்குக் கொண்டு கணக்குக் கணிப்பதாகும். இதை பிரம்மானந்தம் என்றும் சொல்லுவார்.



245

நான்காவதில் எனசொல்வதில், எக்காட்சியும்! எந்நிகழ்ச்சியும் இல்லாத தாம் தாமான நிலையில் அந்த ஆத்மாவும் நாசமாகி எல்லாம் ஒன்றுமேயாக நிலையாகும் என உணர்க.

பரமாகும்

4 அத்வைதநிலை:— இதுவே முடிந்த முடிவு.

இதை அகண்ட ஏக ரசம் என்றும்; அகண்ட ஐக்கிய ரஸம் என்றும்; அகண்டப் பேரொளி என்றும்; சொல்லலாம்.

இரண்டாவதில்:— பதுமைகளாகவும்! பொம்மலாட்டமாகவும்! காணலாம்! இது அசையும் நிலை.

மூன்றாவதில்:— அசையாத! பதுமைகளாக! அதாவது, சிற்பம் சித்திரமாக! அவ்விதப் படம்! நாடகப் படம் காணலாம் இது அசைக்காத & அசையாத! நிலையாகும். இது அத்வைதமாகாது.

அசையாத:— மனம் & அறிவால்! கருமம் இல்லாதது.
அசைக்காத:— கருமம் & இத்திரைக் காட்சியாகும்.
நான்காவதில்:— எக்காட்சியும்! எந்நிகழ்ச்சியும் இல்லாத நிலையில் தாம்தாமான! நிலையாகும்.



நாம ரூபம் மறைந்தால் ([illegible])
பதுமை & ஆட்டம்
மாறும். இதுவும் மறையும் போது
இதயம் & இந்திரம் / அநித்யம்.
இதுவும் மறையும் போது
எல்லாம் மண் மயமாகிவிடும்.

பதுமைகள் ஆடும் பயிற்சியை மனமே முயற்சி,
அதுவும் சர்வார்ப்பணத்தால்தான் முடியும்.

இந்த நான்கையுமே முடிந்த முடிவாகும் என உணர்க.

உதாரணமாகவும் / உபசார வசனமாக

சொல்லும் **அகண்ட** / சமுத்திரமும் / வும்

" " பாலவன மண்டலமும் /

**நம் யதார்த்த** / சொரூபமாகும் /

இதுவும் உதாரணமும் / உபசார வசனமானதே /

(A) பால் போன்ற வெண்மை /

(B) சந்திரனைப் போன்று குளுமை /

(C) அனந்தகோடி சூரியன்களும் இந்த ஒன்றின்முன்
ஓர் மின்மினி பூச்சியின் பிரகாசமாகும்.

ஆகவே **அதுஅகண்டப் பேரொளி** ஆகும்.

அதுவே எல்லாம் / எல்லாம் அதுவே / அதுவே யாம் /
யாமே அது / அதுவே நீ / நீயே அது / இதுவே சத்தியம்.
இரண்டும் ஒன்றே.
நடப்பது நலமே.

**பாபா.**



# ஒழுக்கம்



ஸத்திய வாக்கை!
ஸத்தியம் பேசு
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு

௨௪௭

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"

அதுவே நாம்! நாமே அது! நாமே எல்லாம்!

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை!"
"நம்பினோர் கெடுவதில்லை!"
"தெய்வம் மனுஷ்யரூபம்!"
"யத் பாவம் தத் பவதி!"
"ஸ்ரீராம், ஜயராம், ஜய ஜய ராம்,"

ௐ !!!

அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்,
அகமே எல்லாம்!
ஜகம், பரமும், ஜீவர்களும்,
சிறிதும் இல்லை!
அடங்கு! அடங்கு! அடங்காதே! அடங்காதே!



248

# உ வாழ்க்கை!

வாழ்க்கை! என்பது வாழ்வின்! கைகள்! ஆகும். அக்கைகள்! என்பது புண்ணியம் & பாவம்! என இரண்டாகும். அக்கைகள் இரண்டும்! நாசமாக வேண்டுமானால், **இறை & குரு!** நம்பிக்கையில் வைராக்கியம் எனும் இரு கைகள் வேண்டும்.

வாழ்வில் போதும்! என்ற நிறைவு ” .

முற்கவனம் & தற்காப்பு நாசமாக ” .

பேதம் விருப்பு வெறுப்பு & குற்றம் குறை! ” ” .

## தற்கவனம் & சமர்ப்பணம்

உறுதி குலையாமல் இருக்க வேண்டும்.

இவைகளைக் கடைப்பிடித்தால் வாழ்க்கை வாழ்வது வீணே என அமையாமல் சாதனையாக நிறைவு ஆகும்.

249



# ஓ சாதனா!

நாமரூப! ஜக! ஜீவ! அனைத்து தோற்றங்களையும் காணும்! நிலையில்; பதுமைகளாகவும்! இயக்க! ,, ; பொம்மலாட்டமாகவும்! கண்டு, உணரும்! நிலை பக்தி! ஆகும்.

இங்கு ஆத்திரம்! அவசரம்! வேகம்! படபடப்பு! என்ற டென்ஷன் & எமோஷன்! அணுவும் இராது. மாறாக இறை & குரு உணர்வால், மட்டுமே பெறும். ஓர்மை & ஸாந்தி & அமைதி & திருப்தியின் ஆனந்தம் உண்டு.

அந்நிலை ஸ்வய அனுபவ நிலையில் பெற்றால் தான்.



உ

சர்வார்ப்பணத்தால் (250)

பதுமைகளின் ஆட்டம்

செயலிழக்காமல்

எல்லாம் மண்ணே என

உணர முடியாது. இது சத்தியம்.

நாம ரூப ஜக ஜீவ அனைத்து தோற்றங்களும்

இயக்கமிழந்த தன்மையால்

எல்லாம் மண்ணே/பரமே

என உணரும் நிலை, பெற முடியும்.

பொம்மைகளாகவும்/பொம்மலாட்டமாகவும்!!

கா...... ண...... ம...... ல் அவைகளா

ம...... ண்...... ண...... க!

பரமாக உணரும் நிலை பெற முடியாது.

சர்வார்ப்பணம்/பொம்மை/பொம்மலாட்டமாக்கும்.

பிரம்மார்ப்பணம்/எல்லாம் மண்ணாக்கும்.

சகையல்லால் எளிதான சாதனை இல்லை

மற்றும் அனைத்து சாதனைகளும் சோதனையும் வேதனையும் பயக்கும்.



251

ஒ அன்பின் கூடிய
சா.... த.... னை! ண்!

# ஒரு பிரார்த்தனை!!!!

# ஓர் ஆரத்தி!!!!!!!!

# ஒரு ஸ்துதி!!!!

# ,, மந்திரங்கள்!!!!

மெய்ஞானர்க்கும் பொதும்!!!!

(1) ஒரு பிரார்த்தனை:— அந்த பிரார்த்தனையானது ஸத்குருவின் பிரார்த்தனையாகும். இப்பிரார்த்தனை

நாமரூப/ஜக/ஜீவர்களின்/

நலன் கருதி அவ்வ என உணர்க.



ஆரத்தியில் கூறும்

௨5௨

௧ கருத்துக்களும் அத்வைத அனுபவ உள் ஆனந்தவாகும்.

குருசிஷ்ய ஆத்ம அனுபவ பாவனை தீத! நிலைக்காகும்.


௨ ஓர் ஆரத்தி :— ஸ்வயஞானானுபவ! நிலைக்காகும். தேவ தெய்வ நிலையதில

௩ திருமந்திரங்கள் :—

A ஓம் அஸதோமா ஸத்கமய!
தமஸோமா ஜோதிர் கமய!
மிருத்யோமா அமிர்தம் கமய!
ஓம் ஸாந்தி! ஸாந்தி! ஸாந்தி!

கருத்து :— சாதனை செய்யும் ஸத்சிஷ்யனின்! ஆத்மஞானவழி பாதையாகும்.

B ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத்!
பூர்ணமுதச்யதே! பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே!!
ஓம் ஸாந்தி! ஸாந்தி!! ஸாந்தி!!!



பிரார்த்தனை என்பது (253)

தம் சிஷ்யர்களுக்காக

ஸ்ரீ ஸத்குருவானவர் பரம்பொருளிடம்

உருக்கமாக செய்யும் பிரார்த்தனையாகும்.

கருத்து:- பரிபூரணப்பிரம்ம சொரூபமானது!

அள்ள அள்ள குறையாத ஒன்றாகும். அதாவது

பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தால்;

எஞ்சியிருப்பதும் பூரணமாகும் என்ற கருத்தாகும்.

ஆக இவ்விரு மந்திரங்களே! ஆன்ம ஞான சாதனைக்கு!

போதும் என்பது ஆன்றோர் கருத்து.

## சுருங்கக்கல், கற்றபடிநில்!

என்பதே அன்பின் குடியின்! சாதனையின் போதனையாகும்.

(A)

(3) இரு குரு ஸ்துதி:- குருர்பிரம்மா! குருர் விஷ்ணு!

குருர் தேவோ மஹேஸ்வரஹ! குருர் ஸாக்ஷாத்


பரப்பிரம்மம்! தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ!!!

(B) தெளிவு ஸ்ரீ ஸத்குரு திருமேனி காண்டல்.

தெளிவு ஸ்ரீ ஸத்குரு திருவார்த்தைக் கேட்டல்.

தெளிவு ஸ்ரீ ஸத்குரு திருநாமம் செப்பல்.

தெளிவு ஸ்ரீ குருவுரு! சிந்தித்தல் தானே.



254

அன்பின் குடில் ஓர் ஜட
சொரூபம் தானே?
அது எவ்வாறு சாதனை
செய்யும் என கேள்வி எழுவாம்?
அன்பின் குடிலின் அங்கங்கள்
நீங்கள் அனைவருமாகும்.
உங்கள் அனைவரின் ஒருமித்த சாதனையே
அன்பின் குடிலின் சாதனையாகும் என உணர்க.

(A) அன்பின் குடிலின்! ஆத்ம சாதனை என்பது:

ரூபநாம! தேவ தெய்வங்களுக்கோ!
" " கிரி! கர்த்தாக்களுக்கோ!
நாமரூப! எந்த வந்தன வழிபாடுகளும்!
இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை.

ஆ ஐ வி? நிட கர்த்தாக்களி

எல்லாம் ஒன்றான ஸத்குருவாகவே
உணர்கிறது! உணர்த்துகிறது!

(B) மனிதனுள் உட்பட்ட அனைத்து வர்கமும் ஜீவ ஜோதிகளாயும்!
எல்லாம் ஸ்ரீஸத்குரு! சொரூபமாக காண வேண்டும்.
அனைத்து ஜீவ ஓசைகளையும்; மற்றும் அசைவு ஓசைகளையும்,
ஸ்ரீஸத்குருவின் வாக்காக உணர வேண்டும்.
சாதனையாளர்களின் வாக்கானது ஜீவ ஒலியாம் வரவாகாது.
இறை ஸ்ரீ குரு அபர வாக்காக ஆக வேண்டும்.
கடைசி வாக்கியம் அது அதிரகஸ்யமானதாகும்.



அன்பின் குடில் 256

ஓர் கைகாட்டி

ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
முன் கூறிய நான்கு நிலைகளில்
அன்பின் குடில் இயங்குவதால்
அதை நம்பி சாதனை செய்பவர்களும் பாக்கியவான்களே.

குரு உரு :- ஒலியும்! ஒளியும் ஆகும்.

அவர்க்கு ஒளியே! முந்தையதாகும்.
ஒலி! பிந்தையதாகும் என உணர்க.

அவ்வொலி விளக்காமல், ஒளி துலங்காது. விளங்காது.

ஆகவே ஒலியை முன்னும்; ஒளியை பின்னும்; போட்டார்கள் ஸ்ரீமஹான்கள்.

ஆகவே இந்த ஒலியும்! ஒளியும்தான் ஸத்குரு! ஆகும்.

அந்த ஸத்குருவையே! சிந்திக்க வேண்டும் என்கிறது;
நான்காவது அரியாகும்; என ஸ்ரீமஹான்களின் வாக்காகும்.

இவ்வாறாக நான்கு! நிலைகளில்; இந்த அன்பின் குடில்! இயல்பாக தம் சாதனையை செய்வதால்; இயங்குவதால்

இதை நம்பி சாதனை செய்யும், மெய்யன்பர்களுக்கு. இயல்பாகவே அனுபவம் கூடுகிறது. இது ஸத்தியம்!



256

# வணங்கும்முறை!

ஓர் அன்பரின் முக்கியமான கேள்வி:- அன்பான அப்பா!
தாங்கள் சூரியனையும்! நதியையும்! மலையையும்!
**எங்களுக்காகவே** வணங்குகிறீர்கள்,
என்பதை அறிவுறுத்திவிட்டீர்கள். அவ்வாறே
மேலே கூறிய மூன்றையும் **கண்டு!** நிலையிலும்,
(நேரில் தரிசித்த நிலையிலும்) **காணு!** ,,
(**திசையை நோக்கிய!** வணங்கும்,)
வணங்குவதை நாங்கள் காண்கிறோம்.
அதனுடைய **உண்மையான!** காரணம் என்ன?
மேலும் தெரியாத சூரிய நமஸ்காரம் இருவேளையும்
செய்கிறீர்கள்.
இரவுகாலங்களில் சூரியன் அஸ்தமனமாகிவிடுகிறான்.
அதுசமயமும் வணங்குகிறீர்கள். எதிரில் மதில் சுவர்கள்
மறைத்திருந்தாலும், அந்தத் திசையை நோக்கி,
வணங்குகிறீர்கள்.
இதை வைத்து எம் கேள்வியாவது?




ஒ அறிவுவுடையவனுக்கும் 257 பொருந்தாது என்பது :- அவனும் ஸத்வகுண எண்ணம் உடையவனே. அம்மொழி அறிவின் கற்பனை உண்டு எனை அறிக. ஆகவே அவனும் அவனே புரிந்து கொள்ளமுடியாது என அறிக.

சூரியன் மறைந்த இடத்திலும்.

சூரியன் மறைந்த இடத்திலும்: தாங்கள் ஏதை வணங்குகிறீர்கள்????????????

ஓர் ஏழையின் பதில் :- இது பயனுள்ள கேள்வியே. அவன் செய்யும் அம்மூன்றின் வணக்கங்களும் அவன் அருவறுக்கே பொருந்தும் ஏனையோருக்கு மனம் உடையவர்க்கும் அறிவு உடையவர்க்கும் பொருந்தாது என உணர்க. இனி இதன் கருத்தை உணர்க. மனதுடையவர்களும் அறிவுடையவர்களும் அம் மூன்றையும் நேருக்குநேர்கண்டே நேரில் தரிசித்தே வணங்க வேண்டும்.



258

**பேரறிவு!** நீ விரும்புவனே! அவ்வாறு அமைக்க முடியும்.


ஆகவே நான், காயத்ரி ஜபத்தில் அஜபம் செய்பவர்!

**Ⓐ காலை:–** பிரம்ம முகூர்த்தத்தில்!
(காலம் கடந்த ஒளியில்) சூரியன் உதிக்கும் முன்.
(AM 5 To 6)

**Ⓑ கோணமல்:–** சரியாக உச்சி வெயில்
(மதியம்) 11-30 To 12-30க்குள்

**Ⓒ கண்டு:–** சூரியன் இருக்கும் போதே
PM: 5 To 6 ” ” ”

ஜபம்
↑ செய்ய வேண்டுமென்பது, ஸ்ரீமஹான்களின் அனுபவ வாக்கு.
மேலும் இவ்வாறு இருவரும் புண்ணிய பாபத்திற்கும்
(மனம் & அறிவு)
ஸத்திய தர்மத்திற்கும்! கட்டுப்பட்டவர்களாகும்.



259

பேரறிவுடையவன் ஏக்கட்டுகளும் (எப்பிறப்பும்)

இல்லாதவனுமே. ஆ……ஞ……னீ?

ஏனையோர் கட்டுகளுக்கு (ஆதாரமானவன்).

அவனாலேயே, அனைத்து கட்டுகளும் பிணைப்பு இணைப்புகளும்

இயங்குகின்றன. விளங்குகிறது. துலங்குகிறது.

அப்படிப்பட்டவன், ஏன் வணங்கவேண்டும் என
கேள்வி எழுவாம்.

அவன் உங்களுக்காகவே! உங்களில் ஒருவனாக!

வேடம் தரித்த ஒருவனாகும்!

அவன் பண்ணும் நமஸ்காரம்! உங்களுக்காக.

அவன்! நமஸ்காரம் செய்வது இறைபேர!

நீயாகுக. ஜீவநிலையல்ல! எனஉணர்க.

(இந்தஇடத்திலிருந்தே. அவன் சொன்னதைசெய்; செய்வதை செய்யாதே)



260

சூரியன் எப்போது தோன்றியது என்று எவராலும் சொல்ல முடியாது. அது தோன்றிய பின் வந்த மஹான்கள் தான் அதற்கு சூரியன் என நாமம் இட்டனர். ஆகவே சூரியன் ரூப நாமம் உடையவன் என உணர்க.

இதன் ரகஸ்யம் என்ன வென்றால்?

**மலையையும்! நதியையும்!!**

**கண்டுதான்!** வணங்க வேண்டும்.

அவை இரண்டும் **நாமரூப!** சம்பந்தம் கொண்டவையாகும்

" " இயற்கையும் & செயற்கையும்!

இணைந்து பிணைந்ததாகும். நாமத்தால் தான் விளங்கப்படுகிறது. துவங்கப்படுகிறது

ஆனால் **சூரியன்!** அவ்வாறல்ல என உணர்க.

உலகம் தோன்றும் முன்பே அவன் இருக்கிறான் "

அதை **ஸ்வயம்ஜோதி!** என மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

வேறு எதனிடம் இருந்தும் ஜோதியைப் பெறவில்லை.

மேலும் ஓர் உண்மை.

சூரியன் **ரூபநாம!** சம்பந்தம் கொண்டதாகும்.

சூரியனின் தோற்றம் வந்த பின்னரே நாமம் வந்தது.



சூரிய நமஸ்காரம் 261

இதில் கூறிய நிலையில் செய்ய அவன் ஒருவனுக்கே பொருந்தும். ஏனையோருக்கும் பொருந்தாது என உணர்க.

சூரியன் அது ஓர் ஜோதிப்பிழம்பாகும் என அறிக.

மலையும் நதியும் இயற்கையின் வடிவம் ஆகும். இரண்டாவது ஸ்தானமே பெறுகிறது.

இனி பரஇருப்பை உணர்த்துகிறேன். உணர்க.

பரமேயாம் / யாமே பரம் என

பரநிலையை பெற்ற ஸத்குரு ஒருவனுக்கு

பஞ்சபூதங்களும் தடையல்ல. திரையல்ல. மறைப்பல்ல.

அவன் பரதிருஷ்டியை மேவி இருப்பதால்

அவன் சூரிய நமஸ்காரம் செய்யும் போது,

திரையோ! மதில் சுவரோ! இரும்புக்கோட்டையோ!

அனைத்திலும் மேவாத உயரமலையோ!

மறைப்பு என சொல்ல முடியாது. சொல்லக் கூடாது.

சொல்ல இயலாது என ஆதிசிவஞானிகள் வாக்காக அறிகிலேன்.



262

மறைப்பில்லா வெளிப்பகுதியில் சூரியநமஸ்காரம் செய்யலாம். நாமரூப மறைப்புள்ள பகுதியில் சூரியநமஸ்காரம் செய்ய வேண்டாம் என மெய் அன்பர்களை கேட்டுக் கொள்கிறேன்!

நதியும்! மதியும்! நாட்டுக்கு நாடு! ஊருக்கு ஊர்! மாறுபட்டும்! வேறுபட்டும்! உள்ளன. ஆகவே ஆங்காங்கே, அவைகளை கண்டு தான்! நமஸ்காரம் செய்ய வேண்டும். செய்யலாம். ஆனால்? சூரியன்! அவ்வாறல்ல. எல்லா நாடுகளுக்கும்! எல்லா ஊர்களுக்கும்! எல்லா ஜீவர்களுக்கும்! சூரியன்! ஒருவனே! ஆகவே அந்த உதிக்கும் கிழக்குத்திசையே! முக்கியம் பெறுகிறது" என உணர்க. உன் கண்களுக்கு சூரியன் தெரியா விட்டாலும் எதிர் (அடுத்த) பக்கத்தில் இருப்பது சத்தியமே. ஆகவே கிழக்குத்திசையை நோக்கி, நமஸ்காரம் செய்வது நலமே என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! பாபா.



திரையும்! மதில்சுவரும்!
இரும்புக்கோட்டையும்!
உயர்ந்தமலைகளும்!

263

ஓ நாமரூப
சம்பந்தம் கொண்டவைகளாகும்.
அவனோ நாமரூப ரஹித ஸ்வயம் ஜோதியானவன்.

இந்நிலை பெற்றவனை ஏன் வணங்க வேண்டும்?

அவன் அன்பர்களுக்காக போட்ட வேஷத்தில்
திறம்பட நடிக்கிறான் என மட்டும் உணர்க.

அவன் மெய்யன்பர்களுக்கு!
அவர்கள் பாதம் பணிந்து!
அவன் வேண்டும் பணிவாணவின்மையும்:
உங்கள் மனம் நாசமாகும்வரை!
நாமரூபம் மறைந்து பதுமைகளாக காணும் வரை.
நீங்கள் வணங்கும் மூர்த்திகளோ! இயந்தையோ! சூரியனையோ
கண்டே நேரில் தரிசித்தே வணங்க வேண்டும்.
காணும் வணங்க வேண்டாம் என
மீண்டும் உங்கள் பாதம் பற்றி பணிந்து வேண்டுகிறேன்.

தி.இ. பாபா.



# மனம் & அறிவு! அறிவு & மனம்!

**மனம்:-** நல்ல மனமும் & கள்ள மனமும் ஆகும்.

**அறிவு:-** மனச்சாட்சி & அந்தர்யாமி! இதய வாசி & ஆத்மா! என நான்கு நிலைகளில் இயங்குகிறது.

(A) நல்ல மனம்:- **பிராப்தத்தை** மட்டும் ஏற்று நடத்தும்.

(B) கள்ள மனம்:- பிராப்தத்தையும் **மிஞ்சிய!** நிலையில் செயல்படும்.

உதாரணம்?

(A) கட்டுப்பட்ட ஆசையோடு கூடியது நல்லமனம்.

(B) கட்டுப்படுத்த முடியாமல் மோகவெறியுடன் கூடியது கள்ளமனம்.

(A) வேண்டாம் என அறிவு தடுக்கும் போது, சற்று சிந்தித்து செயலாற்றக் கூடியது நல்லமனம்.

(B) அதே நேரம் அறிவு இல்லை. நம் வினை விதி இப்படிக்கான்



265

வேண்டாம் என அறிவுறுத்துகிறது என்றால், நன்மை தீமையை கண்டறியும் நியதிக்கு அறிவானது டார்ச் வெளிச்சத்தை காட்டுகிறது என உணர்க.

அமைந்திருக்கிற ஒன்றை, அறிவை சமாதானம் செய்து, (அறிவை மோகத்திரையிட்டு மூடிவிட்டு) தன் காரியத்தை முடித்து **வெறியுடன்** கூடிய ஆதாயக் காமவில் வீழ்த்துவது கள்ள மனம்.

Ⓐ **குரு** வாக்கே **வேத** வாக்கென **வேகத்தைக்** கட்டுப்படுத்தக் கூடியது நல்ல மனம்.

Ⓑ **குரு** உனக்குள்ளேயே இருக்கிறார். உன் வினை விதிப்படி **அவர்தான்** நடத்துகிறார். எனவே காம மோகத்துடன் கூடிய

அவரையன்றி அணுவும் அசையாது என, இன்பச் சுவையால் மயக்கத்தால் அவர் வாக்குக்கு **துரோகம்** செய்வது கள்ள மனம்.

Ⓐ முட்டிக் குனியாதே என அறிவுறுத்துவது நல்ல மனம்.

Ⓑ முட்டி மண்டை உடைந்து, மூக்கு உடைந்து அவஸ்தைப்படுவதும்.



266

நான்! என்னுடைய! எனது! என மூன்றுடன் மனம்! இயங்குகிறதும் அது ஆகாமியமாகும். ஆங்காரம்! அவசரம்! படபடப்பு! வேகம் மோகம் வெறியுடன் செயல்பட்டாலும் அதுவும் ஆகாமியமே ஆகும்.

அதற்கே ஓர் சாந்தி! சமாதானம்! சொல்லி, மேலும் **வினை!** பெருக்கத்தை உண்டு பண்ணுவது கர்மமாகும். ஓர் உண்மையை உணர்க.

**விதியின் வழியே மதி செல்லும்!** என்பதும் நம் ஆன்றோர் பழமொழியே! அதே ஆன்றோர்! மற்றொன்றையும் சொல்லி அறிவுறுத்துகிறார்கள் **விதியை மதியால் வெல்லலாம்!** என்று.

முந்தையது **கள்ள!** மனம். பிந்தையது **நல்ல** மனம் ஆகும்.

Ⓐ ஒரு நாம ரூபத்தில் **கடமையான!** மோஹத்தை வைத்தால் அம் **மோஹமே!** அம்புத்திரையாகி விடுகிறது என உணர்க.

அத்திரையானது, உன் நல்ல வழி பாதைகள் அனைத்தையும் மூடி விடுகிறது.

சாக்குப்போக்குச் சொல்லி தப்பிப்பதற்கான தீய **அனைத்து வழிகளையும்** திறந்து விடுகிறது என உணர்க.

அதுசமயம் என்னென்ன சோதனைகள் சொல்ல முடியுமோ அத்தனையும் சொல்லி சாக்குப்போக்கு காட்டி, தீய வழிகளையும் மூடி விடுகிறது.



ஒ பிராரப்தம் நடைபெறும் போதும் அவசரம்! ஆத்திரம்! வேகம்! மோகம் படபடப்பின் வெறி கூடாது.

பொறுக்க பொறுமை! நிதானம்! சகிப்பதில் ஓர் ஆனந்தம்! இயல்பாகவே தோன்றுவதை உணரலாம்.

இதன் காரணம்:- நாம் கொண்டுள்ள நாமரூப வஸ்துவின் மோக/வெறியின்/ஆவேசம் ஆகும். இது களங்கமான ஆசை.

B) விதியை மதியால் வெல்லலாம்:-

1) இறை குருவின் மீது பரிபூரண நம்பிக்கை.

2) குருதேவர் கூறும் ஒழுக்க நெறிமுறைகளை கடைப்பிடித்தல்.

3) பெண், பணம்! இவைகளில் சர்வ ஜாக்கிரதையாக இருத்தல்.

4) ஒழுக்கமே அத்வைதத்தின் பீடம்! என உணர்தல்.

5) நிதானம்! பொறுமை! சகிப்புத்தன்மை! பணிவு! இவை நான்கிலும் ஸ்திரமாக இருத்தல்.

இவை ஐந்தையும்! ஓர் சாதகன் கடைப்பிடித்தால், வரும் விதியையும்! முன் பின் மாற்றி வலிமையைக் குறைக்கலாம். அவைகளைத் தாங்கும் சக்தியைப் பெறுவது இங்கு பரிபக்குவ ஞானியின் மாயா! உபாதியாயிருக்கும். அதுவே விதியை மதியால் வெல்லும் நியாயம். இது நல்வமனம் ஆகும்.



268

நம் வினையாம்படி ஒழுக்கம்

சோதனையும் வேதனையும்!

ஒன்பதை வாட்ட - ஒழுக்கம்!

ஆன்ம பயிற்சி ஆகும்.

அப்பயிற்சியால் வெற்றி அடைய,

க டி ன உ ழை ப் பு வேண்டும் அதனால் ஒழுக்கம்

சற்றுக் கடினமே.

மேலும் அத்வைதம் என்பது ????????????

(1) நாம ரூப / ஜக ஜீவ / விசித்திர வதை / விளையாட்டு.

(2) பதுமைகளின் குறைதோஷமில்லாத ,, .

(3) அசையாத / அசைக்காத / இருப்பு சக்தி / செயலற்ற நிலை.

(4) எல்லாம் ஒன்மயமே / ஒன்றே மெய்மமே / ப்ரம்மமய நமமே / என்ற பரிபூரணம்.

இந்த **நான்கையும்** / கடந்தான, 5

அகண்டஏகரஸம் & அகண்டஐக்கியரஸம் & அகண்டப்பேரொளி!

என்றறிவில் **நாம்நாமாய்** / நாமே அதுவாய் /

சொ ல் ல / வி ள க் க / வி வ க் க / வொ ண் ணா /

**அகண்டானந்த** / நிலையாகும்.

இவை நான்கும் நான்குபடிகளாகும். இந்த நான்கு

(தீர்த்து உள்ள)

படிகளுக்கும், அ ஸ் தி வா ர ம்! அதாவது

(அதாவது)

அ டி ப் ப டை! அ டி த் தா ன ம்! அதாவது,

**பௌ....ண்....டே....ஷ....ன்**

**கருவிகாரண ஒழுக்கம்** / அதுவே எனும் லக்ஷியமாய் உணர்க.

**ஒழுக்கம்** ஆகும்.



ஒருவனுக்கு ஒருத்தி! ஒருத்திக்கு ஒருவன்
என்ற நிலை மாறி
மறு பெண்ணுடனோ,
மறு ஆணுடனோ கூடி வாழும்
கூத்தி நிலையை / வினைவிதி
நடத்தைப் அங்கு விலை முடிவு
அவ்வாறு நடக்கிறதென்று உரைக்க. அங்கு

269

அவ்வொழுக்கமாவது! தர்மமாவது

1 ஒருவனுக்கு ஒருத்தி! ஒருத்திக்கு ஒருவன்!!

2 நான்! என்னல்! என்னை! தவிர்த்தல்!

3 ஒழுக்கவனம்! தற்காப்பு! இவ்வாமை!

4 அடங்குதல்! அடக்காமை! நாவடக்கம்!

5 பொறுமை! பணிவு! எளிமை! இனிமை! கருணை! சகித்தல்! ஆகியவை!

ஆகிய **ஐந்தாகும்**! எனப்பெரியோர்கள் சொல்வர்.

ஆகவேதான் நம் வள்ளுவன் தம் குறளில் சொல்வது?

ஒழுக்கம் விழுப்பம் தரலான்

(நம்வினையின் வழி சோதனையும் வேதனையும் ஒழுக்கம் கொடுக்கும்)

அவ்வொழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்!!!

(அவ்வொழுக்கத்தை நம் உயிரினும் மேலாகப் பாதுகாக்க வேண்டும்)

ஆம் ஒழுக்கம் என்பது **தர்மம்**! ஆகும் என உணர்க.

(வினையின் புண்ணிய பாபமல்வ)



இ அச்சோர்க்கை!
பரிபூரண சம்மதமாகவும்!
எவருக்கும் மனக்கசப்பு
இல்லாமல் திருப்தியின் ஆனந்தம்
அவ்விருவர்க்கும் மகிழ்வ ... மாமுக.
முந்தைய ... இருக்க வேண்டும்.

270

மேலே கூறிய, ஐந்தின் நியதியில் நீ தர்மத்தை! பாதுகாப்பாயாக!!!

அப்படி உன் தர்மத்தை! நீ பாதுகாத்தால், இங்கு அத்தர்மம்! உன்னைப் பாதுகாக்கும்.

மேலும் அந்தர்மம்! உன்னை அத்வைதத்தில் நிலைநிறுத்தும்! என சத்தியமாய் உணர்க.

அவ்வைராக்கியத்தைக் கடைப்பிடிக்காமல் கவனமாக! இருந்து கொண்டு, அத்வைத சாதனை! செய்தால், அத்வைதம் நிலைபெறுவது வாய் நாணமாகிவிடும். ஜீவன்முக்தியும் துர்லபம். லௌகீகம் உன்னை புண்ணியமாய்க் கோர்த்து நிற்கும். தெய்வீகமும்! பாமரத்தக்கும்! உன்னை அவலியும் நடத்து.

பாபா.



# மனக்கசப்போ!

குடும்பப்பிணவோ! (271)

சுவை சத்சங்கங்களோ அருந்தால் விளைப்பெருக விதி!

விளையாகிறதென ஸத்தியமாய் உணர்க.

## அறிவின்! இயக்கம்!

மனச்சாட்சி! அந்தர்யாமி! இதயவாஸி! ஆத்மா! என நான்காகும் என, ரிஷிகள் சொல்வர்.

(A) மனச்சாட்சி :— மனதின் புண்ணிய பாப கணக்குக்குச் சாட்சியாகும். சாட்சி என்றுவிட் மனதின் செயல்களின் கண்காணிக்குமேயன்றி, கண்டிக்காது! தண்டிக்காது. இக் கலி யுகத்தில்! இந்த மனமானது நான்! எனது! என்ற திரையால் மூடியிருக்கிறது.

(B) அந்தர்யாமி :— இது மனச்சாட்சியின் ஓர் அம்ஸம் அங்கம் ஆகும் என உணர்க. இந்த அந்தர்யாமி மனதின் செயல்களின் நன்மை தீமைகளின் படம் பிடித்துக் காட்டும். இதைச் செய்! இதைச் செய்யாதே என சொல்லாது. உணர்த்தாது. ஆனால் இதை ஓர் டார்ச் என்று சொல்லலாம்.



272

அதை உன் தவிர்க்க முடியாத

# பேராசை!

நடக்கிறதை சாக்ஷியமாய் உணர்க.
காரிய கர்த்தா மனம் ஆகும்.
காரண கர்த்தா இதயவாஸி ஆகும்.
பேராசை:- விஷ்ணுவின் பெரிய ஆசை என உணர்க.

C இதய வாஸி:- இது அவரவர் உபாசனா மூர்த்தி யாகிய **ஸ்ரீ பகவான்!** ஆகும் என உணர்க.

இது **மாயா!** சம்பந்தம் உடையதாகும். இது நாம ரூபங்களுக்கு அந்தர்யாமியின் **விதி!** பின்னடி கொடுப்பதும் எடுப்பதும்! ஆகிய கர்ம **காரியங்களு!** சூக்ஷ்மம். **காரண கர்த்தா!** ஆகும் என்று ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்வி.

D ஆத்மா:- இது மாயா வேறு; ஸ்ரீ ஆகும் கர்ம காரியங்களோ **டொந்த!** சம்பந்தமும் இல்லாத சுத்த சைதன்யம் ஆகும். மேலே கூறிய, அம் மூன்றுக்கும் **சாக்ஷியாக** நேர்நிலையில் இருக்கும். சிற்பம் & சித்திரம்! போல் இருந்து காரணமும் கடந்த காரணாதீதமாக! இருப்பதாகும்.
இதுவே பரமாத்மா! இதுவே பரப்ரஹ்மம்! இதுவே பரசொரூபம்!
(இம் மூன்றும் ஒன்றே) என ஆதி ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



273

ஆன்மா செயல்படுவதல்ல. ஆன்மாவை மனம் & அறிவு செயல்படுத்துகிறது என்று பேசப்படுகிறது. மாயா கவர்ந்த அறிவு ஜீவகலான். மாயா கவ்விப்பில்லாத அறிவு ஆத்மா.

இந்த நான்கும் அறிவு என்றும் ஆத்மா என்றும் சொல்லலாம். எல்லாம் ஆத்மாவே! ஆத்மாவே எல்லாம்! ஆத்மா ஒன்றே! நிலைகண்டு செயல்படுவதால் வெவ்வேறு நாமம்! பெறுகிறதென்று உணர்ந்தால் போதும். அது உபசார வசனமே! அதேபோல் மனம் ஒன்றே! பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! எண்ணங்களின் மற்றும் நான்! என்னை! எனதின்! அனைத்து குண! தோஷங்களின் மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரமென வினைகளையெல்லாம் தானே சுமக்கும் ஓர் சுமைதாங்கி! ஆகிறது என்றும் ஞானிகள் சொல்லியர். இவைகளை இம்மனமானது, தெரிந்தே சுமக்கிறது. அதன் காரணம் இன்பமோஹபோதையின் மயக்கம்! என்றும் சொல்லலாம். வாயெல்லாம் புண்ணானாலும், அதே முள்! அதையே தின்னும் ஒட்டகம் போல், இம்மனம் உள்ளதை உணர்ந்தால் போதும்.



274

இம்மனதின் சமாதானம் எப்படி இருக்கிறது என்றால்?

அந்த ஒரு வேளை / அல்லது ஒன்றை ஒரு நாள் / மட்டும் இதைச் செய்வோம் நாளை நிறுத்தி விடுவோம்.

" " மட்டும் இதை சாப்பிடுவோம் நாளை நிறுத்தி விடுவோம்.

" " மட்டும் அவளை / அவனை பார்ப்போம் நாளை காணப் போக மாட்டோம்.

" " மட்டும் தகாத இடம் செல்வோம் நாளைப் போக வேண்டாம்.

ஏனெனில் அனைத்து **பேராசை / மோகம் / காமம் / வேகம்** / மாதச் செய்து முடிப்பது இத்தகைய மனதின் ஏமாற்றமாகும்.

அந்த ஒரு வேளை அல்லது ஒரு நாள் என்பது **10** நாளும் ஆகலாம்.

" " **100** " .

அங்கு உன் ஆயுளும் முடியலாம் " " **1000** " .

அங்கு **விதி** என்ற **காலன்** / உன்னை உண்டு விடும்.

ஆகவே ஜாக்ரதாவஸ்தையில் வெகு ஜாக்ரதையாக இருக்கவும்.

கவனம் தேவை / சிரத்தை தேவை / நம்பிக்கையில் வைராக்கியம் தேவை



ஒழுக்கம் என்பது அறிவின் கட்டுப்பாடும்!! 275

நிலை எண்ணம்! சொல்!! செயல்!!!

என இம்மூன்றின் அடிப்படையில் அமையும்.

ஒழுக்கமே சாதனை! சாதனையே ஒழுக்கம்!!

சிறு சிறு சபலம் (சின்ன ஆசைகள்) ஏற்பட்டாலும், மனச் சலனம் உண்டாகும். அதாவது மன அசைவு! உண்டாகும். மன அசைவு விரிவடையும் போது சந்தேகம்! ஏற்படும்.

விரிசல்! (பிளவு) உண்டாகி அவ்விரிசலால் நீ அதலபாதாளத்தில் மூழ்க! நேரிடலாம். இங்கு மீட்பே இல்லையென உணர்க.

சர்வார்ப்பணத்தின்! அடிப்படை! ஒ...... ழு...... க்...... க...... ம்! ஆகும் என உணர்க.

ஒழுக்கத்தின் முடிவிடம் சர்வார்ப்பணம் ஆகும்.

ஆழ்ந்த பக்தியோ! உணர்ந்த ஞானமோ! கருவிகரண ஒழுக்கம்! இல்லாவிடில்! வாய் ஞானமாக இருக்குமேயன்றி அனுபவ ஞானமாகாது.

ஒழுக்கம் உறுதியானால் சர்வார்ப்பணம் ஸ்திரமாகும்.

சர்வார்ப்பணம் ஸ்திரமாக இருந்தால் ஒழுக்கம் முடிவுறும்.



276

எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடைய! எல்லாம் உனதே!

என்ற **சமர்ப்பணம்!** அசைக்கமுடியாத,

நம்பிக்கையின் வைராக்கியமானதே!

**நீ** ஏது? **உன்** உடைமை ஏது? **உன்** இயக்கம் ஏது?

கீழே உள்ளதை நன்குக் கவனிக்கவும்.

(1) பெண் ஆசையால் **உன்மனம்**! தடுமாறும்போதும்.

(2) பண ,, ,, ,, ,, .

(3) விபரீத ,, -க ,, ,, ,, .


(4) நகாத காரியம் ,, ,, செய்யத்தூண்டும்போதும்.

இப்படி விஷயங்கள் நிறைய எழுதலாம்!

A) நீ பகவானே செய்கிறான் என்றோ. நம் அப்பாவே செய்கிறார்

என்றோ சாந்தி சமாதானம் செய்தால் பொருந்துமா???

அவர்கள் இப்படிச் செய்யத் தூண்டுவார்களா?



277

(B) நம் வினை & விதி! அப்படி அமைந்திருக்கிறது என,
சாந்தி சமாதானம் செய்தாலும் பொருந்துமா??? அது

விதியை மதியால் வெல்லலாம்!

என்று ஞானிகளும் மேதைகளும்! சொல்கிறார்களே?
என உணர்ந்த நிலையில் நம் கர்மம்!
நம்மை மாற்றுகிறது என அறிவு பூர்வமாக தெளிந்து,
சகித்தல் பொறுமை & நிதானம்! இவற்றுடன்
செயல்பட்டால் போதும். கர்மம்!
நல்லமனமாக. இயல்பாக மாறி!
விதியை! வெல்லலாம். அங்கு அந்த நிகழ்ச்சியை ஏற்பவனை!
மாயா! முன் & பின் மாற்றும். அவ்வது வலிமையைத் திருவிளையாடலில் உன் கண்ணுக்கும்! காதுக்கும் எட்டாமல் மறைக்கும்.

278




நம் வாழ்க்கை ஸ்ரீஹரியின் படி! தலைக்கு வருவது தலைப்பாகையுடன் போவதுபோலும்; கால் ஒடியும் இடம் நிலை மாறும்; காலில் ஓர் சிராய்ப்போடு போவது போலும்; ஒரு கோடி நஷ்டம் ஆகும் இடத்தில் ஓர் ஆயிரம் நஷ்டம் ஆகும்; நிலையைக் கட்டியும்; இவ் அவதை உன் நிலைக்கு (ஏனையோருக்கல்ல)

# மட்டும்! மாற்றி அமைக்கும் மாயா!

எனஸ்திரியமாய் உணர்க.

காரணம்:— உன் சர்வார்ப்பணமும் (அதனால் வரும்) உன் பொறுமையும்! உன் சகிப்புத்தன்மையும்! உன் நிதானமும்! உன் **போதும்** என்ற **நிறைவும்**! உன் வாழ்வை மாற்றி அமைக்கும்.

இதன் காரணம்:- இந்த நாமரூப ஜகஜீவ தோற்றமனைத்தும்; மாயாவின் இருப்பாகவும் இயக்கமாகவும் இருப்பதாலும்



(மாயாவின் அம்சமே மனமாக இருப்பதாலும்)

மனம்! மாயாவின் மகனாக இருப்பதாலும்;

உலகையும் & உறவையும்! நம்பாமல் ஒதுங்காமல்!

முழுமையாக! நம்புவதாலும்;

வாழ்வில் ஓர் நிறைவு! உண்டாவதாலும்;

உலகம்! என்ற தொழுவை விட்டோடும்;

ஸ்ரீமத் பகவத் கீதையில் நிலைகளின் அனுபவத்தில்:—

நித்திய (எல்லா) கர்மத்தையும்!

சிரத்தையற்று! எனவருவதைக் கவனிக்கவும்.

மற்றும் அனைத்துச் சாதனைகளையும்! செய்பவன் நிலை வேறு.

ஆத்மஞானசாதனை! " "

ஆத்ம ஞான சாதனை செய்பவனுக்கு மட்டும்!



280

காமாவின்! சிரத்தை குறையும்.

" பாரம் (பரு) " .

" மோஹம் & வேகம் " .

" பொறுமை! நிதானம்! சகித்தல்! நிறைவுறும்.

" இறை & குரு & பரகருணை " .

வாழ்ந்து! அனுபவித்து போதும்! என " .

இன்னமும் வாழவேண்டும் என்ற எண்ணம் முற்றுப் பெறும்.

பொறுமை! அமைதி! சாந்தி! சகித்தல்! கருணை! இவை

இவ்வாதவன் இறை! கருணை பெறவில்லை. அதனால்

இறைகிருபையால் பெறும் ஸத்குரு கருணையும்! பெறவில்லை.

ஆகவே அவன் ஜீவன்முக்தி! பெற தகுதி இல்லாதவன்

என ஆதி ஸ்ரீமஹான்களின் அனுபவ வாக்கங்களை அறிக.

இருப்பது ஒன்றே.

நடப்பது நலமே.


பாபா.



ஒ மனே பரீக்ஷை

(281)

இது தகாது! இது கூடாது!! இது வேண்டாம்! என
கூறும் தர்ம சாஸ்திரத்தின்படி, உன்
ஸ்ரீகுருதேவர் கூறும், பொன்னோ! பொருளோ
பெண்ணோ உன்னைத் தேடி, நாடி, ஓடிவரும்
போது, சாதனை அறியும் நீ முழுமை உன்
வைராக்கியத்தால் தடுத்து நிறுத்து.
சம்பத்தாய் சரியென ஏற்காதே.
உன் கட்டுப்பாட்டையும் மீறி அது உன்னைச் சேர்ந்தால்
பிறவேறு! இது உன் கருணையென ஏற்றுக்கொள்.
அது தோஷமில்லாமல் பிராயச்சித்தமாக முடியும் இறைவழி
நீ உன் மன முயற்சியின்றி அதை ஏற்றால் அது
வினைக்கு வந்ததியல்ல. ஆகமிய வழியானதும். அங்கு
கர்ம தோஷத்திற்கு அஞ்சாதாய்.
இது பாபா. திருவுளம்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!